சத்தியவேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone: No 300

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு தைமாதம் 21-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 3-ம் இலக்கம்

கருதினல் மின்ட்சென்ரி ஆண்டகையை நான் கண்டேன்

புடாபெஸ்ற்நகரிலுள்ள அமெரிக்கதூதுவராலயத்திலே 1956-ம் ஆண்டின் ஹங்கேரிய சுதந்திரவேழுச்சிமுதல் ஓர் அகதியாய் இருந்துவருகின்ற கருதினல் மின்ட்சென்ரி ஆண்டவர் இப்போது தம்முடைய ஞாயிற்றுக்கிழமைப்பூசையைக் காணுகின்ற சிறியவிசுவாசிகள்குழாமுக்கு ஆங்கிலபாஷையிலே ஓப்பரசங்கம் செய்துவருகின்றார்.

ஆஸ்திரியாவின் தலைப்பட்டண மாகிய வியென்னாநகரில் பிரசுர மாகும் "டியே பேர்ச்சி" என்ற கத்தோலிக்க வாரவெளியீடா னது, 67வய துடையவரான கருதினல்மின்ட்சென்ரி ஆண்ட வரைச் சமீபத்திலே தரிசித்துத் திரும்பிய பத்திரிகைநிருபர் ஒரு வர் கொடுத்த அறிக்கையை வெளியிடுகையில், "கருதினல் ஆண்டவர் நொய்யவராய் இருந்தபோதிலும், ஒருவர் எதிர் பார்த்திருக்கக்கூடியதிலும் அதிகம்நல்ல சுகபலமுடையவரா யிருக்கக் காணப்படுகிறார்"என்று தெரிவித்திருக்கிறது. மேலும் அது தெரிவித்திருப்பதுவருமாறு:

"அமெரிக்கதூதுவராலயகட்ட டத்தில் நாம்பிரவேசிப்பது ஓர் அதிசய உணர்ச்சியுடனேயாகும்: கதவின்மேலாகவுள்ள கொடித் தம்பமானது நட்சத்திரங்கள்— வரிகளைக்கொண்ட அமெரிக்க கொடியைத் தாங்கிநிற்கின்றது. வாயில்காப்பவனால் நாம்வரவேற் கப்பட்டோம். அவன் திரமுள்ள இளைஞர்ஒருவரால் துணைகொள் ளப்பட்டு எமதுஅனுமதிப்பத்தி ரத்தைச் சாவதானமாக ஒப்பு நோக்கிப் பரிசோதனைசெய்தான்.

"அதன்மேல்அவன் மரியாதை யாக மேலேதூக்கிச் செல்லும் கருவியண்டை எம்மை வழிநடத் திச்சென்றான். அதுஎம்மை மூன் றுவதுதளத்துக்கு எடுத்துச் சென்றது. அங்குநாம் எச்சரிக் கும்அநேகமணிகளுடன் இணைக் கப்பட்டதாய்த் தோன்றிய கனத்தஉருக்குக் கதவொன்றை எதிர்கொள்ளலானோம். காவலன் ஒருவனால் கதவு திறந்துவிடப்பட் டது. நாம்அங்குவரப்போவதை வாயில்காப்போன் தெலிபோன் மூலம் இந்தக்காவலனுக்குத் தெரிவித்திருந்தான்.

"அங்கிருந்துநாம் பெரியஅறை ஒன்றுக்கு ஒருநடைபாதைவழி யாக அழைத்துச்செல்லப்பட் டோம். அந்தஅறையில் மேசை யின்மேல்"ரெலிவிஷன்செற்"ஒன் றும், ஒருபெருந்தொகையான அமெரிக்கசஞ்சிகைகளும் இருப்ப தைக் கவனித்தோம். நாம்கீனத் தபடியே இந்தஅறை அந்தக் காவலனுடையதாகும்.

"அடுத்துஎதிரேயிருந்த மண்ட பத்தினூடாகக் கருதினல்ஆண்ட வரின் பிரத்தியேகஅறை போய்ச் சேர்ந்தோம். அது மிகவும்பெரிய ஓர்அறையாகும் தூதுவராலய கட்டடத்தின் ஓர்கோணத்தில் அமைந்துள்ளஇந்தஅறை ஐந்து சன்னல்களைக் கொண்டுள்ளது. இவற்றில் இரண்டு பக்கவீதி யொன்றின்பக்கமாய்த் திறந்திருந் தன. எதிரேயுள்ள வீடுகளி லிருந்து எதையும்கவனிக்கமுடி யாதபடி அவற்றிற்கு மரத்திரை கள் இடப்பட்டிருக்கின்றன. ஏனையமூன்றுசன்னல்களும் சுதந் திரசதுக்கத்தை நோக்கியபடி இருந்தன.

"இந்தச்சன்னல்களுக்குஎதிர் முகமாகச் சுவருக்குகணித்தாய் ஒருசாய்மானக்கதிரையும், ஒரு வட்டமேசையும், இவற்றின் மருங்கிலே இருகைக்கதிரைகளும் இருக்கின்றன. ஒருபெரிய அறை யுண்ட திருச்சிலுவையின்கீழ் பக்கவீதியைஎதிர்நோக்கும் இரு சன்னல்களுக்குமிடையே செபஞ் செய்யும் சாய்ந்தமேசைஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் செபமேசைமீது 23-ம்அருளப்ப பாப்பரசரின் பிறேமிடப்பட்ட பிரதிமைப்படம்ஒன்று இருக்கிறது.

"இடதுகோணத்திலே இந்தச் சன்னல்களுக்கும், சுதந்திரசதுக் கத்தை எதிர்நோக்குகின்ற சன்னல்களுக்குமிடையே கருதி னல்ஆண்டவரின் சாய்ந்தமேசை இருக்கிறது. இதன்மேல் தேவ தாயாரின் பிறேமிட்டபடம்ஒன்று இருப்பதை அவதானித்தோம். இந்தச் சாய்ந்தமேசையின் முன் னல் தற்போது ஒருபலிபீடமா கப் பாவிக்கப்படும் மற்றோர் மேசை இருக்கின்றது.

"திவ்வியபூசைக்குரிய திருவஸ் திரங்களை ஏற்கனவே தரித்துக் கொண்ட கருதினல்ஆண்டவர் மவுனமாகச் செபஞ்செய்துநிற் கின்றார். பூசைதொடங்குமுன் ஓர்சீமாட்டி— அந்தத்தூதுவரா லத்தில் உத்தியோகபதவி வகித் திருக்கும் ஒருசீமாட்டி உங்களி லே திவ்வியநன்மைபெற விரும்பு கிறவர்கள் யாரென்று கேட்டுக் கொண்டாள். அவருடையபூசை யைக்காணும் பக்தர்குழாம் ஆறு விசுவாசிகளை மாத்திரமே கொண் டதாகும்.

"கருதினல்ஆண்டவர் தேவைப் படும்தொகையான ஒஸ்திகளைத் தட்டிலேவைக்கிறார். பூசைப்பரி சாரகன் கிடையாது. அவனிட மாக அந்தச்சீமாட்டியே உத்தா ரம் அளிக்கின்றாள். கருதினல்

[தொடர்ச்சி 5-ம் பக்கம்]

சுதந்திர ஜேர்மன்குடியரசின் கத்தோலிக்க பெருந்தலைவர் டக்றர் கொன்ரூட் அடினர்

அருளப்பபாப்பரசர் நாளை22-ந்திகதி வெள்ளிக்கிழமைகாலை 11மணிக்குச் சுதந்திர சமஷ்டி ஜேர்மன்குடியரசின் 'சான்ஸலர்'—அதாவதுதலைமைப்பிரதம ரான டக்றர்கொன்ரூட் அடினர்அவர்களை வரவேற்றுப் பேட்டியருளவிருக் கின்றார். அருளப்பபாப்பரசரும், ஜேர்மனியின் தலைமைப்பிரதமரும் சந்திப்பது இதுவேமுதன்முறையாகும். பிரதமர் இத்தாலிக்குத் தமதுமுன்றுநாள் விஜயத் தின்முடிவிலேயே பாப்பரசரைச் சந்திக்கின்றாரென்பது ஈண்டு குறிப்பிடற்பாலது. இச்சந்தர்ப்பத்திலே கத்தோலிக்கரான இந்தஅரசியல் பெருந்தலைவரைப்பற்றி அறிந்துகொள்வது நலமாகும்.

ஜேர்மனியிலே கொலோன்நகர கலாசாலையொன்றில் படித்துவந்த மாணவர்கள் வழக்கம்போல ஒருநாள் ஆலயஞ்சென்றனர். அங்கே அவர்களில்ஒருவன் கையி லே ஒருசெபப்புத்தகத்துடன் இருவிழிகளிலுமிருந்து கண்ணீர் பெருகச் செபஞ்செய்துகொண் டிருந்தான். அவன்வதனத்தில் சாந்தமும் அமைதியும் குடி கொண்டிருந்தன. சூழ்நிலையை மறந்து, சிந்தனையில் ஆழ்ந்து, சகமாணவர்கள்செய்த பரிகா சங்களையும் பரவாயில்லையது அவன்செபத்திலே இலயித்துப் போயிருந்தான்.

அவனைச்சூழவிருந்த மாணவர் கள் திகைப்பமைகொண்டவர் களாய்ப் பலதையும் சிந்தித்தனர். ஆலயத்திலிருந்த பெரியவர்களும், குரவர்களும் அவனுடையபக்திப் பரவசத்தைக் கண்ணுற்று ஆச் சரியவசத்தராயினர். தான்பிறந்த நாடு, தன்னினம், தன்மொழி, தன் சமயம் ஆகியவற்றின் பெயரால் புகழும்பெற்றுத் திகழவேண்டு மென்றுதான் அவன் பிரார்த்தனை செய்தான். ஜேர்மனிதேசம் கத்தோலிக்கசமய அடிப்படைக் கொள்கையிலே கிறீஸ்துநாதரின் போதனைகளைக்கைக்கொண்டு முன்னேறவேண்டுமென்றே அவன் வேண்டுதல்செய்தான்.

அவன்தான்—அந்தமாணவன்— தான் இன்றுசுதந்திரமேற்குஜேர் மனியின மாபெருந்தலைவராக— ஜேர்மன்மக்களின் அபிலாஷை களை,ஆசைகளைப்பிரதிபலிப்பவரா க— அவர்களின் "சான்ஸலர்"ராக விளங்கும் டக்றர்கொன்ரூட் அடினர்அவர்கள்.84வயதுநிரம் பிய இப்பெரியார் இன்று ஓர் ஐக்கியஜேர்மனியைத் தோற்று வித்து, உலகஅரசியல்அரங்கில் பெரியதொருசக்தியை உருவாக்க முனைந்துள்ளார்.

டக்றர்கொன்ரூட் அடினர் அவர்கள் கொலோன்நகரில் 1876-ம் ஆண்டு தைமாதம்5-ந் திகதியன்று பிறந்தார். கத்தோ லிக்கசமயத்தில் ஊறித்திளைத்தி ருந்தது அவர்குடும்பம். காலையும், மாலையும் கடவுள்சிந்தனையில் ஈடுபட்டிருந்தது அக்குடும்பம். பக்தியும்,பாசமும் அக்குடும்பத் தினரை ஒன்றுகப்பிணைத்திருந் தன.

டக்றர்கொன்ரூட் அடினர் தன்னுடையதாயிலே அளப்பரிய அன்புவைத்திருந்தார். தாய் சொல்லைத்தட்டாத ஓர்தனயனாக வாழ்ந்துவந்தார். குடும்பபிரச் சினையென்றாலும், கலாசாலை விவ காரமென்றாலும், கல்விசம்பந்தப் பட்டதர்க்கமென்றாலும் எதிலும் தன்தாயாரிடமே ஆலோசனை கேட்பார். தாயாரின்சொற்படியே நடந்துகொள்வார். அதனால் அவர்வாழ்வில் அன்னையின் செல் வாக்கு அதிகமாயிருந்தது.

அவருடைய கலாசாலைப்படிப்பு கொலோன்நகரிலிருந்த "சென் அப்போஸ்தல ஜிம்னாஸியம்" என்ற உயர்தரப்பாடசாலையில் ஆரம்பமாயிற்று. ஊக்கத்துட னும், உற்சாகத்துடனும் அவர் படித்துவந்தார். அறிவும்,ஆற்ற லும் பெற்றிருந்தஅவருக்குப் புத்தகம்படிப்பதென்றால் அலாதி யான பிரியமாயிருந்தது. இரா வேளைகளிலும் துயில்கொள் ளாதுநெடுநேரம்படித்துவந்தார். மூனிச், பிறைபேர்க், பொன்முத லாம் நகர்களிலுள்ள சர்வகலா

[தொடர்ச்சி 5-ம்பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியாவிடை வைபவம்

சென்ற 27-12-59 ஞாயிறுவாரம் மடுறோட்டைச்சேர்ந்த கட்டைஅடம்பன் செண்மேறிஸ் கத்தோலிக்க பாடசாலை மாணவர்கள், ஆசிரியர், பெற்றோர் யாவருக்கும் கவலைநிறைந்த ஓர் தினமாகும். மக்கள் வதங்கிய உள்ளத்துடனும், வாடிய முகத்துடனும் காணப்பட்டார்கள். கடந்த மூன்று வருடங்களாகத் தங்களை உள்ளன்புடன் நேசித்து, அரும்பணி ஆற்றிய ஆசிரியர் திரு. பே. இராயப்பு அவர்களின் இடமாற்றமே இதற்கெல்லாம் காரணமாகும்.

மக்களின் பேன்புக்கும், பெருமதிப்புக்கும் பாத்திரமான இந்த ஆசிரியரை இழந்துபோகவேண்டியநிலை ஏற்பட்டமையால் வருத்தமுற்ற பெற்றோரும், மாணவர்களும் மாற்றம் என்பது உத்தியோகத்தின் இயற்கையே என்பதை உணர்ந்தவர்களாய்த் தங்கள் நன்றியைத் தெரிவிக்குமுகமாகக் காலை 6-30 மணியளவில் ஒன்றுகூடினார்கள். இவ்விழாவின் ஆரம்பமாகக் கட்டளைக்குரவர் வண. ஏ. மூயே சுவாமியவர்கள் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுத்தார்.

"இந்த ஆசிரியர் வெறும் சீவனோபாயத்துக்காக மாத்திரம் இத்தொழிலைச் செய்யாமல் பெற்றோர்களால் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளைத் தமது பிள்ளைகள்போற் கருதிக் கல்வியிலும், நன்னெறியிலும் வளர்த்து அவர்களை ஓர் பூரணமனிதராக உருவாக்குவதில் தமது காலத்தைச் செலவழித்தார்" எனத் தலைமை தாங்கிய சுவாமியவர்கள் குறிப்பிட்டார்கள்.

திரு. செ. சவிரி, திரு. சி. அடைக்கலம் ஆகியோர் உரையாற்றுகையில், "எமது கிராமத்தில் ஓர் கத்தோலிக்க பாடசாலையை நிரந்தரமான ஓர் பாடசாலையாக அமைப்பதில் அரும்பாடுபட்டு மாணவர்களை மடையர் என்று புறக்கணியாது, தனித்தனி மாணவர்களிலே அடங்கியுள்ள சக்திகளைப் பயன்படச்செய்து அவர்களைச் சமுதாயத்தில் நல்லபிரசைகளாக உருவாக்குவதில் சாதனைமுதலும், போதனைபின்புமாகக் கடமையாற்றினர் என்று பேசினர்கள்.

செல்வி செசிலியா சவிரி ஆசிரியை அவர்களால் பிரிவு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது. அதன்மேல் அன்பளிப்புகள் வழங்கப்பட்டன. பிரிவிரங்கற் பாக்களிடையே மாணவர்களது நாட்டியம், கடித்தல் ஆதியன சபையோரைப் பரவசப்படுத்தின. பிரிந்துசெல்லும் ஆசிரியர் எழுந்து, "என்னை இப்பாடசாலைக்கு எமது முகாமைக்காரர் எந்த நோக்கத்துடன் அனுப்பினாரோ அதே நோக்கத்தை முதலாகவைத்து என்னாலியன்றளவு இப்பாடசாலையை வளர்ப்பதில் முயற்சித்துப் பயனும் கண்டமையால் நான் திருப்தியுடன் செல்லுகின்றேன்; இதற்கெல்லாம் வேண்டியபோது போதிய ஒத்துழைப்புஅளித்த கட்டளைக்குரவர், பெற்றோர், ஆசிரியர், மாணவர்கட்கு எனதுநன்றியைத் தெரிவிக்கிறேன்; ஈற்றில், இவ்விழாவைக் கொண்டாடி என்னைக்கௌரவித்த சகலருக்கும் நன்றிதெரிவிக்கிறேன்" எனக் கூறிநின்றார்.

ஈற்றில், இப்பாடசாலையின் முன்னேற்றத்துக்காக என்றும்உதவிசெய்துவரும் பேருப்காரியான திரு. செ. சவிரி அவர்களால் ஒழுங்குசெய்யப்பட்ட படப்பிடிப்பு நிகழ்ச்சியுடன் விழாஇனிதே நிறைவுற்றது.

—நிருபர்.

—(:)—

விளையாட்டுப்போட்டி விழா

இயற்கைவளமும், செயற்கைவளமும் பொலிந்து விளங்கும் மாரீசன் கூடல் அர்ச். கபித்தார் கோவிலைச் சேர்ந்த கிறீஸ்தவர்களுக்குச் சென்ற 2-1-60 சனிக்கிழமைஒருதுரதகளாயிற்று. அன்றுகாலை கட்டளைக்குரவர் வண. எஸ். கோமஸ் சுவாமியவர்கள் தலைமையில் ஓர்சைக்கிளோட்டப் போட்டி நடத்தப்பட்டது. இதில் 20 பேர் கலந்துகொண்டனர். புன்னாலைச் சந்தியிலிருந்து சேந்தாங்குளச் சந்திவரை போட்டி நடைபெற்றது. இதில் திரு. எம். செபமாலை முதலாம்இடத்தையும், திரு. பி. ஜேம்ஸ் இரண்டாம்இடத்தையும், திரு. எஸ். தியாகராசா மூன்றாம் இடத்தையும் வகித்துப் பரிசில்கள் பெற்றுக்கொண்டார்கள்.

அன்று பிற்பகல் 3 மணியளவிலே கோவில்மைதானத்தில் ஒருவிளையாட்டுப்போட்டி தொடர்ந்துநடைபெற்றது. அதில் காபந்தாட்டம், பானை உடைத்தல், மைல் ஓட்டம், சாக்கோட்டம், சிலோ சைக்கிள்றேஸ், விநோத உடையணிதல் முதலாம் பல விளையாட்டுகளும், மற்றும் சிறுரின் விளையாட்டுகளும் வியக்கத்தக்க முறையில் திறம்பட நடைபெற்றன. காபந்தாட்டத்தில் திரு. முத்துராசாவின் கோஷ்டி முதலிடத்தையும், மைல் ஓட்டத்தில் செல்வன் லூட்ஸ் முதலிடத்தையும், சிலோ சைக்கிள் றேஸில் திரு. செபஸ்ரியாம்பிள்ளையும், விநோத உடையணிதலில் முதலாவதாகத் திரு. சிறிலூட்ஸும், இரண்டாவதாகத் திரு. வர்த்தலோம்பிள்ளையும், பானைஉடைத்தற் போட்டியில் திரு. என். வர்த்தலோம்பிள்ளையும், கயிறுஇழுத்தலில் திரு. முத்துராசா கோஷ்டியினரும், திரு. சுவாம்பிள்ளை கோஷ்டியினரும் முதலிடங்களைப் பெற்றனர். இறுதியில் முத்துராசாவின் கோஷ்டியே தலையிடம் வகித்தது. ஈற்றில் வண. கோமஸ் சுவாமியவர்கள் மாரீசன்கூடல் மக்களது ஒற்றுமையை வியந்து, தமது விசாரணைப்பங்குக் கோவில்களில் இவ்வித விளையாட்டுகள் இதற்குமுன் நடைபெறவில்லை எனக் கூறி, விளையாட்டிற்கு ஊக்கமளித்த திருவாளர்கள் யோசேப் பேணாட், ஜேம்ஸ் பேணாட், லூட்ஸ் பேணாட் என்பவர்களுக்கு நன்றிகூறினர். பின்னர் போட்டிக்கு நடுநிலைமை தாங்கிய ஆசிரியர் எம். செபஸ்ரியன் அவர்களால் போட்டியைத் திறம்பட நடத்த முயற்சியெடுத்த அனைவருக்கும் நன்றிதெரிவிக்கப்பட்டது. விளையாட்டுகளில் முதலிடம் பெற்றவர்களுக்கு வண. கோமஸ்சுவாமியவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டுப் போட்டிவிழா இனிதே முடிவெய்திற்று.

— நிருபர்

உலகமும் யுத்தஅகதிகளும்

இரண்டாவதுஉலகயுத்தம் முடிந்ததுமுதல் ஆடவர்களும், பெண்களும், பிள்ளைகளுமாய் நாலுகோடிமக்கள் தங்கத்தரிக்கச் சொந்தமான இடமில்லாது அகதிகளாகியிருப்பதாக ஐக்கியநாடுகளின் ஸ்தாபன காரியதரிசி கணக்கிட்டிருக்கிறார். இந்தஅகதிகளில் கம்யூனிஸ்த் அல்லாதநாடுகள் 1கோடியே30லட்சம்பேரைஏற்றுப் பரிபாலித்துவர, மீதியான20லட்சம்பேரும் ஐக்கியநாடுகளின்ஸ்தாபன உதவியிலே தங்கியிருக்கிறார்கள். கம்யூனிஸ்தசீனாவிலிருந்து தப்பியோடியவர்களாய் ஹொங்கோங்தீவில்மாத்திரம்பத்துலட்சம்அகதிகள் இருக்கின்றார்கள். இவர்களைத் தாபரிப்பதில் பிரித்தானியஅரசாங்கம்வெகுவாகக்கஷ்டப்படுகின்றது.

* * *

மகாதேவாலய வில்மச்சுமாடம்

அர்ச். பேதுருவானவர் மகாதேவாலயத்தின் 'டோம்' எனப்படுகின்ற உன்னதவில்மச்சுமாடத்திற்கு மக்களைக் கொண்டுசெல்வதும், கடந்தஅறுபது வருடங்களாகப் பாவனையில் இருந்துவருவதுமான தூக்கிச்செல்லும்கருவி இக்கால நவீனமாதிரியாக்கப்படவிருக்கிறது. இத்தக்கருவி தினமும் சுமார் 1,500போல் பாவிக்கப்பட்டுவருகிறது. இந்தவில்மச்சுமாடத்தைப் பாதுகாக்கும் வேலையைத் தொடர்ந்து நடத்துவதற்கான பாதுகாப்புமனிதரையும், அவர்களுக்குத் தேவைப்படும்பொருட்களையும் மேலேகொண்டுசெல்வதற்கென்று மற்றோர் தூக்கிச்செல்லுக்கருவி அமைக்கப்பட்டுவருகிறது. பழையகருவி மீண்டும்தயாராகிறவரை இத்தரிசகர்களால் உபயோகிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவம்

சில்லாலைவாசரும், யாழ்ப்பாணம் பெரியதெரு, மூத்துவைத்திய சாலை வைத்தியஅதிபரும், இளைப்பாறிய ஆசிரியருமாகிய கொழும்புஅரசினர் ஆயுள்வேதவைத்திய கல்லூரித் தாதாரப்பத்திரம் பெற்றவருமாகிய திரு. அ. செபஸ்தியாம்பிள்ளை அவர்களின் சிரேஷ்ட புதல்வரும், அநுராதபுரம் அரசினர் நீர்ப்பாசன எஞ்சினியர்க்கந்தோரில் கடமையாற்றுகிறவருமான திருவளர் செல்வன் எஸ். ஜே. அருளைநாயகம் அவர்களுக்கும், சில்லாலைவாசரும், இளவாலை சென் என்றீஸ்கல்லூரிச் சித்திரக்கலைஆசிரியருமான திரு. எஸ். இஞ்ஞாசிமுத்துஅவர்களின் இரண்டாவதுபுத்திரி திருவளர்செல்வி விமலாடல்சி அவர்களுக்கும் சென்ற26-12-59 சனிவாரம் காலை8மணியளவில் யாழ்ப்பாணம் பரி. அடைக்கலமாதா ஆலயகட்டளைக்குரவரும், மணமகனின் சிறிய தந்தையருமாகிய வண. எஸ். ஏ. சுவாம்பிள்ளைச்சுவாமிஅவர்களால் யாழ்ப்பாணம் பரிசுத்தகொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக்கோவிலில் மெய்விவாகத்திருச்சடங்கு நிறைவேறியது.

சுவிசேஷத்தின்பின் வண. பிறுன் சிஸ்சேவியர்சுவாமிஅவர்களால் மெய்விவாகத்தைப்பற்றி எவர் மன்தயும் கவரக்கூடிய விதமாக வடிதங்கம் போன்ற ஓர்பிரசங்கம்செய்யப்பட்டது. பூசைமுடிந்ததும் புதுமணத்தம்பதிகள் இனசனர்சிநேகிதர் புடைசூழச் சகல வரிசைகளுடனும் மணமகன்இல்லம் சேரவே, பரிமளிப்பான உபசரணைகள் நடைபெறலாயின. அவ்வேளை பலாலி அரசினர்ஆசிரியகல்லூரிப் பேராசிரியர் பி. எம். வேதநாயகம்பிள்ளை, பி. ஏ. அவர்களால் மணமக்களின் குணநலம், குலகலம்ஆதியாம்பல நலன்களையும் பாராட்டிச் சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல் ஓர்அரிய சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. ஈற்றில், எல்லோரும் திருமணத்தம்பதிகளுக்கு நல்லாசிகூறித் தத்தமில்லம் ஏகினர்.

இப்புதியகுடும்பத்தை ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய பரமபிதா ஆசீர்வதித்து அவர்கள்மீது அருள் சொரியுமாறு வேண்டிநிற்கிறோம்.

—*—

பிரிவுஉபசார வைபவம்

நரக்களி, கத்தோலிக்க சிரேஷ்ட தமிழ்ப்பாடசாலையில் கடந்தபத்துவருடங்களாக முதல்உதவிஆசிரியராகக் கடமையாற்றிய திரு. வீ. எஸ். பிள்ளையவர்கள் சென்ற 18-1-60 முதல் சலாபம் செண்மேரீஸ் சிரேஷ்டதமிழ் ஆண்கள்பாடசாலைக்கு மாறிச்செல்லவிருந்ததை முன்னிட்டுப் பாடசாலைஆசிரியர் மாணவர்களும், கிராமப்பொதுமக்களும் அன்னாரைக் கௌரவிக்குமுகமாகச் சென்ற 11-1-60 திங்கட்கிழமை காலை 10மணிக்குப் பங்குக்குரவர் வண. நீக்கலாஸ்சுவாமியவர்கள் தலைமையில் ஒரு பிரியாவிடைவைபவம் நடைபெறலாயிற்று.

ஆரம்பத்தில் பிரியாவிடைநாயகர் மாலைசூட்டி வரவேற்பப்பட்டார். மாணவிகள் பிரியாவிடைக்கீதங்கள் படித்தபின் மாணவன் பி. அன்ரனியால் அழகியவேலைப்பாடமைந்த பிரிவோபசாரப்பத்திரமொன்றுவாசித்து ஒப்பிக்கப்பெற்று, விலைமதிப்புள்ள பொருட்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. தலைமைவகித்த சுவாமியவர்களும், தலைமைஆசிரியர் எம். ரீ. லெம்பட்டுஅவர்களும் இடம்மாறிச்செல்லும் ஆசிரியரின்சேவைத்திறனை வியந்துபாராட்டிச் சொற்பொழிவுகளாற்றியதும் ஆசிரியர் வீ. எஸ். பிள்ளையவர்கள் தமக்களித்த சிறப்பான பிரியாவிடைவைபவத்திற்குக் காரணமாயிருந்த அனைவருக்கும் மனமுவந்து நன்றிகூறியபின் சிற்றுண்டி உபசரணைகளுடன் வைபவம் முற்றுப்பெற்றது. அதன்மேல் தலைமை ஆசிரியரின் சொந்தஇல்லத்தில் பரிமளிப்பான பகல்விருந்து அளிக்கப்பட்டது.

— நிருபர்

திறப்புவிழா

புதிதாகக் கட்டிமுடிக்கப்பட்ட சிறுத்தோப்புக் கிராமமுன்னேற்றசங்கக் கட்டடத்திறப்புவிழா சென்ற 10-1-60 ஞாயிறுவாரம் கௌரவ டி. ஓ. அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அன்றுபிற்பகல் 5 மணியளவில் அவர் அலங்கரிக்கப்பெற்றிருந்த புதிய மண்டபத்தின்முன் வரவேற்கப்பட்டுக் கரகோஷங்கள் மத்தியில் சம்பிரதாயமுறைப்படி புதிய மண்டபத்தைத் திறந்துவைத்தார்.

அதன்மேல் பேசாலைக் கட்டளைக்குரவர் வண. ஏ. எஸ். சிங்கராயர் சுவாமியவர்கள் புதிய மண்டபத்தை ஆசீர்வதித்து ஆசிஉரை வழங்கினர். தொடர்ந்து ஆசிரியர் ஜே. தவித், செவாலியர் ஜே. வி. பல்டாஸ்ரு, ஜே. பி., எம். பி. ஈ., கணக்கு மதிப்பிடுபவர், ஆர். டி. ஓ. முதலானோர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியதும் தேநீர் விருந்துபசாரம் நடைபெற்றது.

பின்னர் கௌரவ டி. ஓ. அவர்கள் பேசுகையில், இவ்வூர் மக்களாகிய உங்களுக்கு விவசாயத்தில் போதிய அனுபவமும், அதற்குச் சிறந்தநிலமும் இருக்கிறபடியால் உங்கள் கூட்டுறவுஸ்தாபனங்கள்மூலம் அரசாங்கத்தின் உதவியைப் பெற்று விவசாயத்தை அபிவிருத்திசெய்ய முன்வரவேண்டும்; உங்கள் வேண்டுகோளுக் கிணங்கிச் சிறுத்தோப்புக்கெனத் தனியாக ஓர் கிராமமுன்னேற்றசங்கத்தை இம்மண்டபத்திலே கூடியகெதியில் அங்குரார்ப்பணம் செய்யவிருக்கிறோம் என்று கூறினர். கடைசியாக, ஆசிரியர் அன்ரனிதாம் அவர்களின் நன்றியுரையுடன் விழா நன்கு முடிவடைந்தது.

— நிருபர்

* திருச்சபையின் நான்காவது பாப்பானவர் யார்?

ரோமைநகரின் அர்ச். கிளமென்ற்—அதாவது, சாந்தப்ப பாப்பானவரே. இவர் ஓர் ரோமைப்பிரபு. அப்போஸ்தலர்களால் மனந்திருப்பப் பட்டவர். அர்ச். பேதுருவானவராலேயே இவர் ஓர் மேற்றிராணியாராக அபிஷேகஞ் செய்யப்பெற்றார். கி. பி. 9-ம் ஆண்டு திருச்சபையின் நான்காவது பாப்பானவராயினர். ஓர் வேதசாட்சியாக இவர் மரணம் அடைந்தார். இவருடைய திருநாள் திருச்சபையிலே கார்த்திகைமாதம் 23-ந் திகதி கொண்டாடப்படுகிறது.

பெத்தலேம் நகரும்
கிறிஸ்மஸ் விழாவும்

சென்ற கிறிஸ்மஸ்விழாவன்று லத்தீன் திருச்சடங்குப் பத்திரியாக்குவான கோறி ஆண்டவரால் தலைமைதாங்கப் பெற்ற சுமார் ஆயிரம்கிறீஸ்தவர்களின் சுற்றுப்பிரகாரத்திற்கென்று ஜெரு சலேமிலுள்ள மான்டெல்போம் பெரிய வாயிலில் ஜோர்தான்-இஸ்ரயேல்நாடுகளின் எல்லைப் புறத்தைக்குறிக்கும் முட்கம்பித் தடைகள் நீக்கிவிடப்படலாயின. ஆயினும் 6,500 பேருக்குமேற் பட்டயாத்திரிகர்களுக்கு இந்தஎல் லைப்புறத்தைக்கடந்துசெல்வதற் கான அனுமதி வழங்கப்படவில் லை. பெத்தலேமுக்குச் செல்லும் ஐந்து மைல்தூரமான பாதையி லும் சுற்றுப்பிரகாரத்துக்குப் பொலிஸ்பாதுகாப்பு அளிக்கப் பட்டது. அதுமுந்தமுந்த இராக் கேலின் கல்லறையில் தரித்து நிற்க, அங்கே பத்திரியாக்கு ஆண்டவர் பெத்தலேம், பெயிற் ஜாலா, பெயிற்சாஹூர் எனு மிடங்களின் பிரதிநிதிகளால் வர வேற்கப்பெற்றார். அடுத்துப்பெத் தலேமில் தேவபாலன் பிறந்த மாட்டுத்தொட்டிலின் முன்பாக வுள்ள மைதானத்தில் சுற்றுப் பிரகாரம்தரிக்க, அங்கு கோவில் அதிகாரிகளும், பட்டின அதிகாரி களும் மற்றோர்வரவேற்பு அளித் தார்கள். அதன்மேல் மாலையாரா தனைக்கென்று சுற்றுப்பிரகாரம் அர்ச். கத்தறீன் அம்மாள் ஆல யஞ்சென்றது. இதனைத்தொடர்ந் து திவ்வியபாலன்பிறந்த திருக் குகையில் ஓர்சிறுஆராதனை நடைபெறலாயிற்று. நடுச்சாமப் பூசையின்பின் அர்ச். கத்தறீன் அம்மாள் ஆலயத்தில் பத்திரி யாக்குஆண்டவர் திருக்குழந்தை யேசுவின் திருச்சுரூபம்ஒன்றைக் கரத்தேந்தித் திருக்குகைக்குச் சுற்றுப்பிரகாரத்தை வழிநடத் திச்சென்று அங்கேதொட்டிலில் வைக்கலாயினர்.

பாப்பரசரின்
கிறிஸ்மஸ் பூசைகள்

அருளப்பபாப்பரசர் தம் மூடைய முதலாவது கிறிஸ்மஸ் பூசையை நடுச்சாமத்தின்போது வத்திக்கானிலுள்ள பவுலின் சிற் றாலயத்திலேபரிசுத்தஸ்தானத்தி னிடமாக இருந்துவருகின்ற பிற நாடுகளின் ஸ்தானீகர்கள், இரா சியதூதுவருக்கெனநிறைவேற்றி னர். இரண்டாவது பூசையைப் பொழுது உதயமாகுமுன் தமது படுக்கையறையின் பக்கமாக வுள்ள சின்னக்கோவிலில் நிறை வேற்றினர். மூன்றாவது கிறிஸ் மஸ்பூசையை அர்ச். பேதுருவா னவர் மகாதேவாலயத்திலே 20,000 பக்தர்குழாம் சமூகமாக நிறைவேற்றலாயினர்.

அதன்மேல்அவர் ஆலயசதுக் கத்துக்கு மேலாகத்தோன்றும் அதன் மத்திய பலகணிவாயில் மேடைமீது ஒருசிம்மாசனத் தமர்ந்து ஒருசொற்பொழிவாற்றி னர். அப்போது ஆலயசதுக்கத் தில் ரோமர்களும், யாத்திரிகர் களுமாக அவரை வாழ்த்திநின்ற பல்லாயிரமக்கள் குழுமியிருந்தார் கள். அவரின் சொற்பொழிவு கிறிஸ்மஸ் செய்திபற்றிய அலங் காரமற்ற ஓர்சாதாரண பிரசங்க மாய் இருந்தது.

அதனைக்கேட்டு நின்றவர்களுக் கெல்லாம் அவர் "ஒளிக்கும், சந் தோஷத்துக்கும், சமாதானத் துக்குமாகத் தமதுசோபன வாழ்த்துகளைத் தெரிவித்தார். ஒளிஎன்பது யேசுக்கிறீஸ்துநாத ரென்று விளக்கம் கூறினர். "எமக்குக் கிறிஸ்மஸ் என்பது அன்பின் சாதனையிலே அவரு டைய போதனையினது உண்மை யின் இனிமையைக் கருதுகின் றது; சமாதானம்என்பது, அந் தப்புனிதமான இரவின்பரலோக செய்தி பற்றிய நித்தியகான" மென்று அவர்வர்ணித்தார். அது "பூமிக்கு— நன்மனதுள்ள மனி தருக்குக்கொடுபட்ட பரலோக நன்கொடை" யாகுமெனக்கூறி முடித்தார்.

பாப்பரசரும்
தென்மார்க்கின்
அரசதம்பதிகளும்

தென்மார்க்நாட்டின் பிறெடெ றிக் அரசரும், இங்கிறிட் அர சியும் சமீபத்திலே ரோமைநகருக்கு விஜயஞ்செய்தபோது, வத்திக கான் மாளிகைசென்று அருளப் பபாப்பரசரைச் சந்தித்தமையை யிட்டு அந்நாட்டின் அரசாங்க சமயமாகிய லுத்தேர்சபையைச் சேர்ந்த பாதிரிமார்இருவர் அவர் களில் குற்றம்பிடித்து ஆட்சே பித்திருக்கின்றனர். அரச தம் பதிகள் பாப்பரசரைப்போய்ச் சந்தித்தமை யானது கத்தோ லிக்கதிருச்சபையை அங்கீகரித்த தற்குச் சமானமான ஓர்குற்ற மென்று இருவரும் சாதித்துநிற் கின்றனர். ஆனால், மூன்றாவ தான ஒருலுத்தேர்சபைப் பாதிரி யாரோ, "அரசர் பாப்பரசரைக் காண விரும்புவாராஞல், அது அவரின் சொந்தப் பிரத்தியேக கருமம்"என்று அவர்களின் ஆட் சேபனைக்குப் பதிலளித்திருக்கின் றார். தென்மார்க்கிலுள்ள ஆறுஸ் சர்வகலாசாலையில் லுத் தேர்சபைச் சரித்திரபேராசிரிய ரான திரு. பி. ஜி. லின்ட்ஹாட் அவர்கள் இறுத்தபதிலிலே "வத் திக்கான் இராச்சியத்தின் அர சர்என்றமட்டில் அரசரும், அரசி யும் பாப்பரசரைத் தரிசித்திருக் கின்றனர்; இந்தத்தரிசனை சமய சம்பந்தமான அர்த்தம்எதனையும் கொண்டில்லை"எனத் தெரிவித் திருக்கின்றார்.

முஸ்லீம் நாட்டில்
மாதாவின் கோவில்கள்

சிலகாலமாக உலகசெய்திகளில் ஒருமுக்கியஸ்தானத்தைப் பெற் றுவருவதான ஈராய்க்எனப்படும் முஸ்லீம்நாட்டிலே தேவதாயார் பேரால் நாற்பது கத்தோலிக்க கோவில்களுக்குமேல் இருந்து வருவதாக அந்நாட்டின் தலைப் பட்டணமாகிய பாக்டாட்நகரி லுள்ள கத்தோலிக்க கல்லூரி யின்தலைவரான யேசுசபையைச் சேர்ந்த வண. யோசெவ் மெறிக் சுவாமியார் கண்டறிந்திருக்கின் றார். 65லட்சத்துக்கு மேற்பட்ட அதன்குடிசனங்களில் கத்தோ லிக்கர் அதிகம்சிறுமையினராய் — அதாவது சுமார் 2லட்சத்து 25 ஆயிரம்பேராய் இருக்கின்ற னர். இவர்களில் பெரும்பகுதி யினர் பாக்டாட், பஸ்ரா, மொசூல் எனும்நகர்களிலே சஞ்சரிக்கின்ற னர். ஆயினும் நாட்டின் வடபகு தியில்முற்றாகவே கிறீஸ்தவர்களே — பிரதானமாய்க் கத்தோலிக்க ரைக்கொண்ட அநேககிராமங் கள் இருந்துவருகின்றன. அங்கு துருக்கிய எல்லையிலிருந்து பார்சி கக்குடாவரையிலே நாடுமுழுவ தும் பரந்துள்ள சால்டிய திரு ச்சடங்குமுறைக்குரிய 26 கோவில் களும், சீரியதிருச்சடங்கு முறைக் குரிய 5 கோவில்களும் தேவமாதாவின் பேரைக் கொண்டிருக்கின்றன. பாக்டாட் நகரிலுள்ள ஆர்மீனிய திருச் சடங்குமுறைக்குரியகோவில் மோட்சாரோபண மாதாபேரால் அர்ப்பணஞ்செய்யப் பட்டுள் ளது. லத்தீன்திருச்சடங்குக்குரிய கோவில்கள்எட்டும் தேவதாயா ரின் திருநாமத்தையே தாங்கியன வாய்ப் பிரான்ஸிய கார்மேல் சபையாராலும், அமெரிக்கயேசு சபையாராலும் கொண்டுநடத் தப்படுகின்றன. பாக்டாட் தலை நகரில் அதிகம்பிந்தியதாய் 19 57-ம்ஆண்டுகட்டப்பட்டகோவில் பாத்திமாமாதா கோவிலென்று நாமம்சூடியுள்ளது.

—(:)—

13 பிரதமர்களை வழங்கிய
மிஷன் பாடசாலைகள்

ஆபிரிக்காவைச்சேர்ந்த கை ஜீரியாவிலே ஒண்டோநகரின் பீல்ட் மேற்றிராணியார் அயர் லாந்தில் அன்றுபேசியபோது, "மேற்கு-மத்திய ஆபிரிக்காவில் இருந்துவருகின்ற 13 சுதேச பிரதம மந்திரிகளான சகலரும் மிஷன் பாடசாலைகளில் படித்த வர்களேஎன்பது கவனிக்கத் தக்க"தெனக் கூறலாயினர். ஆபிரிகாவிலே திருச்சபையின் கல்வித்தேவைகள்பற்றிப்பேசிய போதே அவர் இவ்விதம் கூறி னர். இன்று தனதுநாட்டுக்குத் தேவைப்படுகிறவர்கள் பட்டதாரி களாயுள்ள சாதாரணகத்தோ லிக்கரேஎன்றும், இவர்கள் கிடைக்குமிடத்துக் குருமார்கல் வித்தொண்டிலிருந்து விலகித் தங்கள் ஆத்மீகதொண்டுகளைக் கொண்டுநடத்தக் கூடியோரா வார்களென்றும், பட்டதாரிகளா ன சாதாரணகத்தோலிக்க ஆசி ரியர்களைத் தாம்கண்டுகொள்ளு மிடத்துத் தம்முடைய மேற்றிரா சனத்தில்மாத்திரம் திருச்சபை மேலும் பன்னிரு மத்தியகலா சாலைகளைத் திறக்கக்கூடியதா யிருக்குமென்றும் அவர் தெரி வித்தலாயினர்.

நான்சிங்நகர்
அதிமேற்றிராணியார்

சீனதேச நான்சிங்நகர அதி மேற்றிராணியாரான யு-பின் ஆண்டவரைப்பற்றி நெடுங்கால மாக யாதாமோர்செய்தியும் வர வில்லை. இவர் சீனாவிலிருந்து நாடு கடத்தப்பெற்றுத் தற்போது ஐக்கியஅமெரிக்கதேசத்தில் சஞ் சரித்து, வெளிநாடுகளிலுள்ள சீனமாணவர்களை விசாரணை செய்வதில் ஈடுபட்டிருக்கின்றார். இவர் சிலவருடங்களின்முன் அதி க பிரஸ்தாபம் பெற்றிருந்தார். சீனக்குடியரசின் அரசாங்கமகா சபையில் இவர்முக்கியஸ்தானம் வகித்து, மாஷல் சியாங் கை-ஷெக்அவர்களின் பெரியநண்ப ராய் விளங்கியிருந்தார். சமீபத் தில் பரிசுத்தபாப்பரசர் இவ ரைச் சீனக்குடியரசின் இருப் பிடமாகிய போர்மோஸாதீவிலே ஓர்கத்தோலிக்க சர்வகலாசாலை யை ஆரம்பிக்குமாறு — அதா வது சீனதேச பீக்கிங்நகரில் இருந்துவந்த கத்தோலிக்க சர்வ கலாசாலையினிடமாக அமைக்கு மாறு அதிகாரங்கொடுத்து அனுப்பியிருக்கின்றார். யு-பின் அதிமேற்றிராணியார் இந்தஎதிர் கால சர்வகலாசாலையின் தலைவ ராக நியமனஞ்செய்யப்பெற்றுத் தற்போது அதற்குவேண்டியநிதி களை ஐரோப்பாவிலும், அமெரிக் காவிலும் சேகரிப்பதில் ஊக்க மாக ஈடுபட்டிருக்கின்றார். பாப் பரசரும் அதற்கெனத் தமது சொந்தப் பங்குத்தானமாக ஒரு லட்சம்டலர் கொடுத்திருக்கின் றார்.

✻ திவ்வியநற்கருணையின் சின்னங் கள் எவை?

திவ்விய நற்கருணைஅப்பம் கோது மையிலிருந்து செய்யவும், முந்திரிகை இரசம் முந்திரிகைப் பழங்களிலிருந்து வடிக்கவும்படுகின்றன. அதனால் கோதுமைத் தானியக்கதிர்களும், முந் திரிகைப் பழக்குலைகளும் நமது திவ் விய கர்த்தரின் திருச்சரீரமும், திரு இரத்தமுமாகிய தேவநற்கருணையின் சின்னங்களாக வழங்குகின்றன.

✻ செபமாலைத் தேவபரம இரகசி யங்களின் சின்னங்கள் யாவை?

களிகூர்ந்த பரம இரகசியங்களின் சின்னமாக லீலிப்புஷ்பமும், வியாகுல பரம இரகசியங்களின் சின்னமாக முட்களும், மோட்சானந்த பரம இர கசியங்களின் சின்னமாக ரோஸாப் புஷ்பமும் வழங்கிவருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைமாதம்

பொதுக்கருத்து: தமது சனங்களின் ஒற்றுமையைவிரும்பும் யேசுவின்திருஇருதய சிநேகத்தைப்பற்றிய நம்முடைய பூரணஅறிவு மெய்யான திருச்சபையைத் தேடும்யாவரையும் அதில் கொண்டுசேர்க்கும் படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து: திருச்சபையிலிருந்து பிரிந்திருக்கும் கீழைத்தேச கிறீஸ்தவர்கள் கத்தோலிக்க திருச்சபையின் முழுஉண்மை விசுவாசத்தை அடையும் ஆவலினால் தூண்டப்படுமாறு மன்றாடிக்கொள்வது.

சத்திய வேத

பாதுகாவலன்

1960-ம் ஆண்டு

தைமாதம் 21-ந்திகதி

சுவாமி ஞானப்பிரகாச அடிகளின்

நினைவுதினம்

நமது சற்சமயத்துக்கும், தமிழ் அன்னைக்கும்அளப்பருந்தொண்டுகள் ஆற்றித் தம்முடைய பூதவுடம்புமறைந்தும் புகழுடம்பு மறையாது நிறுவிநிற்கும் சொற்கலைப்புலவர் சுவாமி ஞானப்பிரகாசஅடிகள் இறைவனடிகள் சேர்ந்த பதின்மூன்றாம் ஆண்டு நிறைவுஞாபகதினம் நாளை22-ந் திகதி வெள்ளிக்கிழமை வருகின்றது. அதனால்இந்தவேளை அவரைநினைவுகூர்வதும், நினைவுவிழா எடுப்பதும் சாலவும்பொருத்தமான செயல்களேஎன்க. சுவாமி. ஞானப்பிரகாசரென்று சொல்லக் கேட்டாலேபோதும், அவர்நமது மனத்திரையில் ஆயிரமாயிரம் இடங்களில் காட்சியளிக்கக் காண்போம். அவரின் இனியபேச்சுகள், அரியபிரசங்கங்கள், மற்றும் அறிவுரைகள், சொற்பொழிவுகள்எல்லாம்நமது செவிகளில் இன்பகானம்போல் தொனிக்கக்கேட்போம். புன்னகைதவழும் அவரின்புனிதவதனம் மலரக்கண்டுஉவகைஎய்துவோம். இறந்தும் இறவாதவர்போல், மரணத்திரையில் மறைந்தும் மறையாதவர்போல் நமதுமறை அடிகளை நினைவிற்கொள்வோம்

சுவாமிகள் நமதுமேற்றிராசனத்திலே நமதுசற்சயயம் வளம்பெற்றுவளர அல்லும்பகலுமாக 42வருடகாலம் அயராதுழைத்தார். ஐயாயிரவருக்கு மேற்பட்டமக்களுக்கு ஞானதீட்சையளித்தார். 37சமயநிலையங்களை அடியிட்டுப் பரிபாலித்தார். நம் சமய அறிவுக்கும், சமயப் பிரசாரத்திற்குமாக எத்தனையோ நூல்கள், எத்தனையோ கட்டுரைகளை எழுதினர். ஆங்கில, பிரான்ஸிய, லத்தின்பாஷைகளிலிருந்து அநேகசமய நூல்கள், பிரசங்கங்களைத் தமிழாக்கஞ் செய்தார். அஞ்சாநெஞ்சராய் வீரத்துவமாக வேதபோதகஞ் செய்தார். பகிரங்கமாகத் தர்க்கப்பிரசங்கம்செய்தார். இவ்வாறான அருஞ்சமயதொண்டுகளாலே பிரஸ்தாபம்பெற்ற சுவாமியவர்கள் ஒருசின்னச்சவேரியாரென்றும், இருபதாம்நூற்றாண்டின் சாங்கோபாங்க சுவாமிகளென்றும் பாராட்டப்பெற்றமை ஆச்சரியமன்று.

சமயதொண்டுடன் நின்றுவிடாது சுவாமிகள் நம்தமிழுக்குச் செய்துள்ள இணையற்ற தொண்டு தமிழறிஞர்கள் அனைவராலும் விதந்துகொள்ளப்பட்டதொன்றாகும். அவர் பலதுறைகளிலும் தமிழை விருத்திசெய்துள்ளார் தமிழில் அநேகநூல்கள் இயற்றியுள்ளார். ஆராய்ச்சிமூலம தமிழின்உற்பத்தியை அறிந்து வெளிப்படுத்தினர். தமிழ்ப்பாஷையின் அஸ்திபாரங்கள் — அதாவது மூலங்களைக் கண்டுபிடித்து, அதைமறுபாஷைகளுடன் ஒப்புநோக்கித் தமிழின் உற்பத்தியை இனிதே விளக்கிக் காட்டினர். மேல்நாட்டுப்பாஷைகளும், கீழ்நாட்டுப் பாஷைகளுமாக அநேகபாஷைகளைக்கற்று அவற்றைத் தமிழினதும், தமிழரினதும் தனிப்பெருமைக்குப் பயன்படுத்தினர். தம்முடைய அழியாதஞானசிகரின்னமாகச் சொற்பிறப்பு— ஒப்பியல்அகராதியைஆக்கித் தமிழன்னைக்கு ஓர் புகழ்மாலை சூட்டியருளினர். இவ்விதம்சுவாமிகள் ஆற்றியுள்ள சமயதொண்டு, கலைத்தொண்டு, தமிழ்விருத்தித்தொண்டு ஆதியவைகளை இந்தவேளை நாம்நினைவு கூர்ந்து, அவரதுதொண்டுகளின் வழியே நாமும் செல்லமுயல்வோமாக!

பாராளுமன்றப் பொதுத்தேர்தல்

பாஷைப்பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை, வாழ்க்கைச் செலவேற்றப் பிரச்சினை, குடியேற்றப்பிரச்சினை, பிரஜாவுரிமைப் பிரச்சினை, பொருளாதாரப்பிரச்சினை ஆதியாம் பல்வேறு பிரச்சினைகளும் காட்டிலே ஒன்றடிமன்றடியாகத் தலைதூக்கிக் கொண்டிருக்கும் ஒருசந்தர்ப்பத்திலே—கடந்தமூன்றரைவருட காலமும் நடைபெற்றுவந்த ஆட்சியின்விளைவாக ஐக்கியமும், அமைதியும், சட்டமும், ஒழுங்கும், சமாதானமும் சீர்குலைந்து நாட்டின்செல்வம குன்றியுள்ள ஓர் சந்தர்ப்பத்திலே— நாட்டிலுள்ள பல்வேறுசமூகத்தினரிடையே துரதிர்ஷ்டவசமாக நல்லெண்ணம் உருக்குலைந்து, அதுகாரணமாக ஜனநாயகமே கலைகுறைந்துபோயிருக்கும் ஓர்சந்தர்ப்பத்திலே பாராளுமன்றப் பொதுத் தேர்தல்நடந்தேறவிருக்கின்றது. முந்தியநாள் பெய்தமழைக்கு நேற்றுமுளைத்த காளான்கள் போன்று இந்தத்தேர்தலிலே சுமார்இருபதுகட்சிகள் புதிதாக வெளிகொண்டு—ஒவ்வொன்றும் ஒவ்வோர்கவீனபெயரைச் சூடிக்கொண்டு செய்துவரும் பிரசாரங்களைக்கேட்டுச் செவியேபுளித்து, மனமே இதற்குள்ளாகச் சலித்துப்போய்விட்டது.

பழையகட்சிகளும்தான்—புற்றீசல்போலெழுந்தபுதியகட்சிகளும்தான் தேர்தல்விஞ்ஞாபனங்கள்விடுக்கின்றன. மாபெரும் கூட்டங்களும், மாசிறுகூட்டங்களும் நடத்தியும், வானொலியைப் பயன்படுத்தியும் பிரசாரங்கள் நிகழ்த்துகின்றன. இதோ! வானத்தைவில்லாய் வளைக்கிறோம்; மணலைக்கயிறாய்த் திரிக்கிறோம்; அம்புலியைப்பிடித்து அங்கையில்தருகிறோம்; அரிசிவிலையைக் குறைக்கிறோம்; வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கிறோம்; வாழ்க்கைச்செலவைக்குறைக்க ஒருகைபார்க்கிறோம் என்றெல்லாம் சிலகட்சிகள் பிரசாரஞ்செய்து மக்களின் உணர்ச்சியை அருட்டுகின்றன. எத்தனையோ உறுதிவாக்கெல்லாம் அளிக்கின்றன. இன்னும் அந்தக்கட்சி இதுவரை சாதித்ததென்ன? இந்தக்கட்சி இதுகாலவரை சாதித்ததென்ன? அந்தப் பிரச்சினைகளைத்தீர்க்க அவைகளிடம்திட்டமில்லை; இந்தப்பிரச்சினைகளைத்தீர்க்க இவைகளிடம் திட்டமில்லை; எங்களிடம்தான் உண்டு,உண்டு என்றெல்லாம் கட்சிகளுக்குக்கட்சிகள் அறைகூவுகின்றன. அபேட்சகர்களிலும் அவரைஇவர் சந்தர்ப்பவாதியென்றும், இவரைஅவர் சந்தர்ப்பவாதியென்றும் ஒருவர்ஒருவருக்குப் புகழ்மாலைசூட்டுகின்றனர். ஆனால், ஆட்டுத்தேர்லப் போர்த்த ஓநாய்கள்போன்று சிலகட்சிகள் 1958-ம்ஆண்டின் வகுப்புவாதக்கலவரங்களை மறக்துபோலும், மீண்டும் அதேகலவரங்களை மாத்திரமல்ல, மதகலவரங்களையும் உண்டுபண்ணுதற்கான வித்திடுகின்றன. அதனால் இந்தப்பொதுத்தேர்தலின் விளைவாய் ஐக்கியஇலங்கையர் சமுதாயத்தைஉருவாக்குவதற்குச் சிலகட்சிகள்முயன்றுவர, வேறுசிலகட்சிகளோ ஐக்கியமற்ற இலங்கையர்சமுதாயம்ஒன்றை உருவாக்கி நாட்டையேபாழாக்கமுனைந்துவருகின்றன. எத்தனைகட்சிகள்இருந்துமென்ன, எத்தனைபேர்அபேட்சகர்களாகமுன்வந்துமென்ன, 145தொகுதிகளுக்கும் 151அங்கத்தவர்களைதெரிவுசெய்யப்படுவார்கள். ஆனால்,இந்தவேளை பலரின்சிந்தனையிலும் பிறக்கும்கேள்விகள் எவை? இலங்கையில் எந்தஅரசியற்கட்சி அரசாங்கத்தை அமைக்கும்? எத்தகையஅரசாங்கம் அமைக்கப்படும்? என்பனவே. புதியஅரசாங்கம் ஒரேகட்சி அரசாங்கமாய் இருந்தாலென்ன, ஒருகூட்டுக்கட்சி அரசாங்கமாய் இருந்தாலென்ன, இன்று மனக்குழப்பமடைந்துள்ளமக்கள் நாட்டில் ஸ்திரமானநிலைமையையும், அமைதியையும், வகுப்புச் சமரசத்தையும், மதச்சகிப்புத்தன்மையையும், சட்டத்தையும் நிலைநாட்டவல்ல அரசாங்கத்தையே தெரிவுசெய்யவேண்டும். சுயநலங்கருதாது நாட்டின்நலத்தையே முக்கியமாகக் கருதுகிறவர்களையே பாராளுமன்றத்துக்குத் தெரிந்தனுப்பவேண்டும். நிற்க, தமிழர் தன்மானத்துடன் வாழப் புதியஅரசாங்கம் வகைசெய்யுமா? தமிழினம் இழந்த உரிமையை மீண்டும்பெற்றுச் சுதந்திரத்துடன் வாழவேண்டுமானால் தமிழ்மக்கள்அனைவரும் ஒன்றுசேர்ந்து ஒரேகொள்கையுடன் ஒத்துழைக்கவேண்டுமென்று கூறவேண்டிய அவசியமில்லை.

எதிர்பாராத விதமாய்க் 'கறன்ற்' நின்றுவிட்ட காரணமாகப் பத்திரிகை வெளிவரத் தாமதம் ஏற்பட்டதையிட்டு வருந்துகிறோம்.

சுதேச வர்த்தமானம்

இலங்கைவானொலி தேசியஒலிபரப்பில்

கத்தோலிக்க நிகழ்ச்சி

இலங்கைவானொலி தேசிய ஒலிபரப்பில் இம்மாதம் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்: நற்சிந்தனை நிகழ்ச்சி—பேசுபவர்: அ. யேசுதாசன்

காலை 6-55 தொடக்கம் 7-00 வரை

23-ம் திகதி "ஆலயம் தொழுதல் சாலவும் நன்று"

24-ம் ,, "அன்னையும்பிதாவும் முன்னறி தெய்வம்"

25-ம் ,, "கத்தோலிக்க சேவை"

அரைமணி நிகழ்ச்சி

24-ம் திகதி காலை 9-30 மணிதொடக்கம் 10-00 மணி வரையும்

அர்ச். செபஸ்தியாரின் வேதசாட்சியத்துவம்பற்றிய நிகழ்ச்சி.

பத்தாவது மாகாணம்

இலங்கையின் பத்தாவதுமாகாணமாக ஊவாமாகாணத்தின் ஒருபகுதி பிரிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஊவாச் சமபூமிமாகாணமென்று பெயரிடுவதாகத் தெரியவருகிறது. இம்மாகாணத்தின் தலைப்பட்டணமாக மொனராகலை தெரிவுசெய்யப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதாம். ஏனெனில், பல பகுதிகளிலிருந்துவரும்— அதாவது மட்டக்களப்பு, வெள்ளாவியா, வதுளை, பிபிலைமுதலாம் பகுதிகளிலிருந்துவரும் பாதைகள் இப்பட்டணத்தைச் சந்திக்கின்றன.

தேர்தலும் கொடிகளும்

பொதுத்தேர்தல்நடைபெறும் தினமாகிய பங்குனிமாதம் 19-ம் திகதியைத்தவிர அதற்குமுன் எல்லாநாட்களிலும் தேர்தல்சம்பந்தமான கொடிகளை எவரும் உபயோகிக்கலாம். ஆனால், தேர்தல்தினமன்று அபேட்சகர்களும், அவர்களின் தேர்தல் ஏசன்றுகளுமமாத்திரமே தேர்தல்கொடிகளை உபயோகிக்கமுடியும். தேர்தல்தினமன்று அபேட்சகர் எவராயிருந்தாலும் அவரை ஆதரிக்கும் நோக்கத்துடன் பொதுவீதிகளிலோ, வீதியோரங்களிலோ, பொதுசனப்பிரயாண வாகனங்களிலோ, அபேட்சகரை அல்லதுஅவரின் தேர்தல் ஏசன்றுகளை ஏற்றிச்செல்லும் வாகனங்கள்அல்லாத ஏனைய வாகனங்களிலோ, தண்டப்பிரசுரங்கள், அட்டைகள், சுவரொட்டிகள், அடையாளங்கள், கொடிகள்முதலியன உபயோகிக்கக்கூடாது. முடிக்குரியன வாயுள்ள அல்லது முனிசிப்பல்சபை, பட்டினசபை, கிராமச்சங்கம் ஆதியனவற்றிற் குரியனவாயுள்ள காணிகளிலே பிரசாரக்கூட்டங்கள் நடைபெறும் தருணங்களில் அவைகளை உபயோகிக்கலாமேதவிர, ஏனையசமயங்களில் உபயோகிக்கலாகாது.

பொதுத்தேர்தலும் பஸ்சேவையும்

பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கும்தினமாகிய பங்குனிமாதம் 19-ந் திகதியன்று வாக்காளருக்குவசதியாய் விசேஷபஸ்சேவைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளை இலங்கைப் போக்குவரத்துச்சபை செய்துவருகின்றது. அன்றுதினம் தெருவில்ஓடக்கூடிய பஸ்கள்அனைத்தும் ஓடவிடப்படும். அன்றுதினம் நாடெங்கும் 3,500பஸ்கள்ஓடும். இப்போது உபயோகத்தில் இருக்கும்பஸ்கள்2,500. இத்தவிசேஷ சேவைகள் காலைமுதல் மாலைவரை நடத்தப்படும். ஆனால், இப்போதுள்ள பிரதானவீதிகளில்தான் பஸ்கள்ஓடும். முந்தியதேர்தல்களிற்போல இம்முறை தேர்தல்அபேட்சகர்கள் கார்களைஉபயோகிக்கமுடியாது. அதனால், பஸ்சேவைகளை வாக்காளர் வரவேற்பார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுதந்திர ஜேர்மன் குடியரசின் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலைகளில் சட்டமும், பொருளாதாரமும் புயின்ரூர். பொருளாதார தத்துவங்களை ஊன்றிப் படித்தார். தான்பிறந்தநாட்டின் பொருளாதாரத்தைப் பற்றிப் பெருஞ்சிரத்தையுடன் கற்ரூர். கலாநிதிப்பட்டமும் பெற்று 1901-ம்ஆண்டு அரசாங்கசேவைப் பரீட்சையிலும் அரங்கேறினர்.

வளரும்.

முதிப்புரை

வளன் மலர் (1)

(மாணவர் வெளியீடு)

தமிழையும், சமயத்தையும், தொழிலையும் வளர்ப்பதையே தனது தலையாய பணியாகக்கொண்டு கடந்த நூற்றாண்டுகாலமாக வடஇலங்கைக் கத்தோலிக்க மக்களுக்கு அருந்தொண்டாற்றிய கொலம்பகம், சஞ்சூசையப்பர் தாபனத்தின் சாதனைகழக மாணவர் வெளியீடாக "வளன் மலர்"வெளிவந்துள்ளது. இம்மலர் பல்கதைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும் தாங்கி நிற்பதோடு மாணவரதும், ஆசிரியரதும் பல்வகைத்தேர்ச்சிகளைக் காட்டும் அரிய அறிக்கைகளையும், படங்களையும் அடக்கியுள்ளது.

ஆன்மவளர்ச்சி, உளவளர்ச்சி, உடல்வளர்ச்சி, தொழில்வளர்ச்சி என்பவற்றில் மாணவர் கடந்தஆண்டில் ஈட்டியதேர்ச்சிகளையும், நாட்டியசாதனைகளையும் தலைமையாசிரியர்அவர்கள் இரத்தினச்சுருக்கமாக விளக்கும்திறமும், கொலம்பகத்தாயின் பழமையையும், பண்பாட்டையும் சொல்லோவியமெனத் திகழுமாறு ஆசிரியமணி பண்டிதர் வீ. ஏ. யோன்பிள்ளை அவர்கள்வரைந்தமுறையும், விவிலியநூற்கருத்தும், திருக்குறட்கருத்தும் ஒற்றுமைப்படும் மாண்பைக்காட்டுவதான வித்துவான் ச. சி. ஞானப்பிரகாசம் அவர்களின் ஆராய்ச்சி நெறியும் இம்மலருக்குத் தனிஅழகு தருவனவாம். இன்னும்மாணவரின சிந்தனைத்தெளிவையும், கற்பனைவண்மையையும் விளக்கிக்காட்டும் பாடல்களும், ஆங்கிலக் கட்டுரைகளும் மலரின்அகஎழிலைப் புலப்படுத்துவனபோல் புனிதமான அச்சுவேலைப்பாடுகள் மலரின்புற அழகை உயர்த்தியுள்ளதெனின் மிகையாகாது. எனவே,இம்மலர் இளம் உள்ளங்களில் நல்லபதிவை ஆக்கிவைக்கும் என்பதில்ஐயமில்லை. பெற்றோரும், மற்றோரும் இதனைப்படித்துப் பயனடைவார்களாக! எமக்கு அனுப்பியபிரதிக்காக நன்றி கூறுகின்றோம்.

ரெயில்பாதைகளும் பாதுகாப்பும்

நாடெங்குமுள்ள ரெயில்பாதைகளைச் சுற்றோட்டம்நடத்திப்பாதுகாப்பதற்கென்று 580காவல்காரர் தெரிவுசெய்யப்பட்டுச் சென்ற 16-ந்திகதி சனிக்கிழமைமுதல் கடமையாற்றி வருகின்ரூர்கள். இவர்களுக்கென்று இந்த நிதிவருடத்தில் மூன்றுலட்சம்ரூபா செலவாகும். ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும் இருகாவற்காரர் ரெயில் பாதைகளில் சுற்றோட்டம்நடத்திக் காவல்செய்வார்கள். இராணுவம் எங்கெங்கெல்லாம் முகாமிட்டிருக்கிறதோ அங்கெல்லாம் இராணுவவீரர்கள் திடீரெனச்சென்று ரெயில்பாதைகளில் சுற்றோட்டம்நடத்தி நிலைமையை அவதானிப்பார்கள். அதிகாரம் பெற்றுள்ளவர்களைத்தவிர ஏனையோர் ரெயில்பாதைகளில் நடந்துசென்ரூல் அது குற்றமாகஎடுக்கப்பட்டுத் தண்டனைக்குள்ளாகுவர். ரெயின்களின்வேகம் குறைக்கப்படமாட்டாது. ஆனால் பாதுகாப்புஅதிகாரிகள் ரெயின்களில் பிரயாணஞ்செய்வார்கள். ரெயில் பாதைகளிலும், ரெயில்வேஸ்ரேஷன்களிலும் காரணமின்றி அலைந்துதிரிகிறவர்கள் ஒருகண்வைக்குமாறு நாடெங்குமுள்ள பொலிஸ்ஸ்ரேஷன்களுக்கெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஓர் இராட்சத சுறுமீன்

சுமார் ஒருதொன்நிறையும், இருபதுஅடிநீளமுமான இராட்சதசுறுமீன் ஒன்று சென்றவியாழக்கிழமை பாக்குத்தொடுவாய்நீரில் காங்கேசன்துறையைச்சேர்ந்த கடற்ரொழிலாளிஒருவரால் பிடிக்கப்படலாயிற்று. பெருந்திரளான மக்கள்சென்று அதனைப் பார்வையிட்டார்கள். கடந்தபத்துவருடங்களிலே இப்படிப்பட்ட ஒருபெண்ணம்பெரியமீன் காங்கேசன் துறைப் பகுதியில் பிடிக்கப்படவில்லையாம்.

சீனிச்செய்கை ஆரம்பம்

1கோடியே 90லட்சம்ரூபாசெலவில் அமைக்கப்பட்டுள்ள கல்லோயாச் சீனித்தொழிற்சாலைவருகிறவைகாசி—ஆனியிலே சீனிஉற்பத்திசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச்சீனி இறக்குமதிசெய்யப்படும் சீனியைவிட நன்ரூகச் சுத்தஞ்செய்யப் பட்டதாயிருக்கும். வருகிற்வைகாசிமாதத்திலே கலலோயாப்பள்ளத்தாக்கில் பயிரானகரும்புகள் வெட்டும்பருவம் அடைந்துவிடுவதால் சீனி உற்பத்திசெய்யும்மாதங்கள்

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

அமரவாழ்வு நினைவு

தோற்றம் : 30-8-1875 **மறைவு : 22-1-1947**

மாண்புறுசெந் தமிழன்னை மகிழவந்தோன்
மானிப்பா யம்பதியில் மலர்ந்த செல்வம்
ஆண்டகைஞற் பண்புகளின் அரியஇல்லம்
ஆய்ந்தாய்ந்து பலநூல்கள் ஆக்கித்தந்தோன்
நீண்டபுகழ் உலகமெலாம் நிலைக்கச்செய்தோன்
நிகரற்ரோன் ஞானப்பிர காசரென்னும்
காண்டரிய கலைக்கடலின் ஒளியால் நெஞ்சின்
கறையகற்றி நாம்புதிய சோதிகாண்போம்.

●

ஆன்றதமிழ்ப் பேரறிஞன் அறத்தின் ரூபம்
ஆன்மீகத் துறையினுக்கோர் அசையாத் தம்பம்
ஈன்றெடுத்த ஈழத்தின் பெருமை காத்தோன்
ஏழைஎளி யார்களது இனியதோழன்
தோன்றுமுயர் கலைமொழிகள் பலவும் கற்ரோன்
துதிக்கரியோன் ஞானமணிச் சுரங்கமானோன்
தேன்றமிழின் இனியதவச் செல்வம் எங்கள்
திருமறையின் ஒளிவிளக்கு நினைவு வாழ்க.

●

சொற்கலைக்கோர் புலவரென அறிஞரேத்தச்
சுடர்கான்ற செங்கதிரோன் சொல்லின் செல்வன்
விற்பனர்க்கோர் விற்பனராய் விளங்கி நின்ரோன்
வேதமொழி ஆராய்ச்சி வெற்றி கண்டோன்
நற்பெருமை சேர்நல்லூர்ப் பதியின் மன்னன்
ஞானப்பிர காசப்பேர்க் குவமையானோன்
'சொற்பிறப்பு ஒப்பியல்நூல்' எழுதித் தந்தோன்
சோர்வறியா துழைத்தகுரு நினைவு வாழ்க!

—மானிப்பாய் வாசி.

ஹங்கேரியும்

கம்யூனிஸ்தர்களும்

ஹங்கேரியிலே மற்றுமோர் தரம் கம்யூனிஸ்த சுத்திகரச் சடங்குஒன்று நடத்தப்படவிருக்கிறது. அதாவது சமயத்திலே நம்பிக்கையுடையவர்களான கம்யூனிஸ்தகட்சி அங்கத்தவர்கள் கண்டறியப்பெற்று அகற்றிவிடப்பட விருக்கிரூர்கள். "கம்யூனிஸ்தகட்சி தனது வரிசைகளிலே சமயகொள்கைகளைப் பரப்புவதை இனிமேலும் சகித்துக் கொண்டிருக்க மாட்டாது; கம்யூனிஸ்தகட்சி முதன்முதலாக அதிகாரத்துக்குவந்தபோது, தங்கள் சமயத்தை அனுசரித்துவந்த கட்சி அங்கத்தவர்கள்மட்டில் வரையறுக்காது ஓளவுஇளக்காரம் காட்டியது உண்மைதான்; ஆனால்,கட்சி அங்கத்தவர்கள் சமயக்கொள்கைகளை அறவேஎன்றைக்கும் அகற்றிவிடவேண்டியகாலம் வந்துவிட்டது; சமயக் கொள்கைகளை நீக்கமுடியாத கட்சித்தலைவர்கள் தள்ளிவிடப்படுவார்கள்"என்று "ஸ்ரார்டோல் மிஸ்ரெல்லி"என்ற கம்யூனிஸ்த பத்திரிகை கூறுகின்றது.

கருதினல் மின்ட்சென்ரி ஆண்டகை ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டவர்தானே பூசைப்புத்தகத்தை ஒருபக்கத்திலிருந்து மறுபக்கத்தில் எடுத்துவைக்கின்ரூர். அவர் திவ்வியபூசை நிறைவேற்றும்போது எல்லோருக்கும் கேட்கக்கூடியதாக உரத்தசப்தமாய் உச்சரிக்கின்ரூர். சுவிசேஷத்தின்பின் ஆங்கிலத்தில் சுருக்கமான ஒருபிரசங்கம் செய்கின்ரூர். உரமான ஹங்கேரிய எடுத்தலோசையுடனும், தாம்சொல்லவிரும்புவதற்குத் திருத்தமான ஆங்கிலசொல்முறையைக் கண்டுகொள்வதில் கஷ்டமேற்பட்டால் நீண்டதாமதத்துடனும் அவர் பதமையாகப் பேசுகின்ரூர். தமதுபிரசங்கவேளை ஒரு திசையாய்த் தூரமானஇடத்திலுள்ள ஒருபொருளை ஊன்றிநோக்கியவராய்க் காணப்படுகின்ரூர்.

"நாம் தூதுவராலயத்தைவிட்டு வெளிகொண்டபோது சிலஹங்கேரியபொலிஸர் சந்தேகக்கண்கொண்டு எம்மைநோக்கியவண்ணம் நின்றனர். ஆனால், எமது சிந்தனைகள் அந்தக்கட்டடத்திலேயே—திருச்சபையின் இளவரசர் ஒருவர் பிராணபத்துக்குரிய துன்பகரமான தமதுசுமையைப் பெரிதும்வீரத்துவமாகச் சுமந்துகொண்டுசெல்லும் அந்தக்கட்டடத்திலேயே இன்னும்சென்றுகொண்டிருந்தன."

ORDER NISI

IN THE DISTRICT COURT OF POINT PEDRO

In the matter of the Intestate estate of Mariamma wido of Innasimuttu Amirthanathar of Valvettiturai.

Testamentary Jurisdiction } No. 656

Saminathapillai Sebastiampillai of do. Petitioner.

Vs.

1. Bastiampillai Soosaipillai of Valvettiturai.
2. J. X. R. Anthonipillai C/o. Roy Bandaranayaka, Hokandaya Road, Hunnupitiya.
3. Selvanathar Anthonipillai, St. Thomas' Church Lane, Mathagal.
4. Edward Selvanathar, Teacher Fatima School, Pesalai.
5. Joseph Selvanathar, 5/3, Nicodemus Lane, Catholic Press Road, Jaffna.
6. C. V. Amirthanayagam and wife.
7. Mary Theresa both of Masassabel House, Mathagal.

Respondents.

This matter coming on for disposal before S. Thamby Durai Esquire District Judge of Point Pedro on the 20th day of November 1959 in th presence of Mr. A. N. Velayutham Proctor on the part of the Petitioner and the Petition and affidavit of the Petitioner having been read:

It is ordered that the Petitioner as nephew of the deceased be declared entitled to obtain Letters of Administration to the estate of the deceased and such Letters of Administration be accordingly issued to him unless the Respondents or any other person shall appear before this Court on or before the 28th day of January 1960 and shew sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 20th day of November 1959.
15th day of December 1959

Sgd. M. ESURAPATHAM,
A/District Judge.

Drawn by:
Sgd. A. N. Velayutham,
Proctor for Petitioner.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் பக்கம்

அன்புமிக்க இளைஞர்களே!

திருச்சபை ஒற்றுமை வாரம்

கத்தோலிக்க உலகமானது, இந்தவாரத்திலே திருச்சபையின் ஒற்றுமைக்காக மன்றாடுகின்றது. தமது கடைசி இராப்போசனத்தின்போது யேசுநாதர் திருச்சபையின் ஒற்றுமைக்காக மன்றாடி, அவ்வொற்றுமையையே அச்சபையின் அடையாளங்களுள் ஒன்றாகவும் சொல்லிக் காட்டியருளினார். அப்போஸ்தலர்களினின்று தொடர்ந்துவரும் இச்சபையின் ஒற்றுமையை விட்டுப்பிரிந்து, அதன் தலைவராகிய பாப்புவின் அதிகாரத்தை நிராகரித்துச் சீவிக்கும் கணக்கற்ற பிதிதமதங்கள், திரும்பவும் தங்களது தாய்ச்சமயமாகிய கத்தோலிக்க ரோமான் சபையினுள் வந்து சேரவேண்டுமென்பதே, இக்கருத்து.

வருகிற வருஷத்தில் நடக்கவிருக்கும் திருச்சபைப் பொதுச்சங்கத்திலேயும், தம் தாய்ச்சபையை விட்டுப்பிரிந்தோர் யாவரும் திரும்பவும் வருவதற்குரிய வழிவகைகளை ஆலோசிப்பதே பிரதான நோக்கமாகும். இப்பெரிய அலுவலில் நீங்களும் பங்குபற்றவேண்டும். தாராளமனசுடன் தேவனிடம் பிரார்த்தியுங்கள். இவ்வுலகில் ஒரேமந்தையும், ஒரேமேய்ப்பனும் இருக்கத்தக்கதாகச் சர்வேசுரன் தாம் உண்டுபண்ணிய திருச்சபையை ஆக்கித்தரவேண்டுமென மன்றாடுங்கள்.

ஞானப்பிதா

நேர்மையே ஜெயங்கொள்ளும்

C. H. சந்தானம்

மாலைநேரம். பறவைகள் தங்கள் கூடுகளைத்தேடிப்பறந்தன. பாம்பினங்களோ புற்றுகளில் நின்று வெளிக்கிளம்பின. வானத்திலே விண்மீன்கள் எங்கும் பரவிக்கிடந்தன. அந்நேரத்தில் விக்றர்தன்தலையை உயர்த்திச் சுவரில் தொங்கியிருந்த கடிகாரத்தைப்பார்த்தான். அப்போது மணி 8-35ஆகிக்கொண்டிருந்தது. அப்போது அவன் அன்னையும், அருமைத்தந்தையும் அயலாரும் சூழ்ந்திருக்க விக்றரின் அருமைத்தந்தை நித்திய நித்திராதேவியின் வலையினுள்ளே உறங்கிவிட்டார். அப்போது விக்றரும், அவனது அருமைத் தங்கையும் ஆருயிர்அன்னையும் கோ.....வென அழத்தொடங்கினர். கடைசியாக அவர்கள் தங்களைஒரு படியாகச் சமாளித்துக்கொண்டு மறுநாள்மாலை 4மணியளவில் இறந்தவரின் உடலைத்தரைக்குள் புதைத்துவிட்டனர்.

பாவம், பன்னிரண்டுவயதுநிரம்பப்பெறாத விக்றர் தன்தாயையும், தங்கையையும் காப்பாற்றுவதற்காகத் தன் பாடசாலைச் சீவியத்திற்கு மூற்றுப் புள்ளிவைக்க நேரிட்டது. தன் தாயையும், தங்கையையும் ஒரு விதமான குறைவுமின்றிக் காப்பாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு ஏதேனும் ஓர் வேலை தேடி வீடுவீடாய், கடைகடையாய்ச் சுற்றி அலைந்தான். ஆனால், அவன்மேல் அனுதாபப்படுவோர் ஒருவருங்கிடையாது. பாவம், அவன்மனதில் தந்தையின் எண்ணம் தணலாக எரிந்தது. சிலவேளைகளில்யாரும்தன்னைக் கேலிபண்ண நேர்ந்தால் விம்மிவிம்மி அழுவான். காரணம் அவன்தந்தையின் மரணந்தான்.

விக்றரின்மனதில் சிலவேளைகளில் களவெடுத்தாலென்ன என்றஎண்ணங்கூட உதிக்கும். ஆனால், அந்த எண்ணத்தை அவன் மனச்சாட்சி குட்டிக்கலைக்கும்.

மாலைநேரம் மணி 4இருக்கும். விக்றர் ஓர்மாட்டுவண்டியின்பின் அழுதகண்ணும், சிந்திய மூக்குமாய் வந்தான். அவன்வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அருமைச் சகோதரி பசிக்களையினால் தன்கிட்டே வருவதைக் கண்டதும், அவன் கண்களிலிருந்து கண்ணீர் சொட்டுச் சொட்டாக விழுந்தது. தன்பிள்ளைகளின் அல்லலைக்கண்ட தாய் தன்கணவனை நினைந்து ஹோ.....வென அழத் தொடங்கினாள். தனக்கு நடந்தசம்பவத்தையும், தன் தாய், சகோதரி படும்கஷ்டத்தையும் மனதால் படம்பிடித்தான் விக்றர். செய்வதென்னவென்று அறியாமல் விம்மிவிம்மி அழுதுகொண்டு சவேரியார்கோவிலுக்குள் நுழைந்தான். என்னஆச்சரியம்! விக்றர் தன்கண்களையே நம்பவில்லை. தான்ஏதோ கனவுகாணுவதாக எண்ணினான். காரணம் என்னவெனில் கோவிலின்கதவருகில் ஐந்துரூபா நோட்டுஒன்று கிடந்தது. அதை எடுத்துச்சென்று தன்ஆதரவை நாடிநிற்கும் தாயுடையவும், தங்கையுடையவும் பசிப்பிணியைப் போக்க எண்ணினான். ஆனால், அவனின் தூயவுள்ளம் அதற்கு இடங்கொடுக்கவில்லை. கோவிலிலிருந்து எடுத்தபணத்தைப் பங்குக்குருவானவரிடம் ஒப்படைக்க முடிவுகட்டினான். விக்றரும், அக்காசுமாய்ப்பல தடவை மனப்போர் புரிந்தனர். அப்போரில்விக்றர்ஜெயித்து ஐந்துரூபா நோட்டைக் குருவானவரிடம் கொடுத்தான். விக்றர் தனக்கு எவ்வளவு அதிகமான கஷ்டம் வந்தபோதும்களவுசெய்து உண்ணவில்லை. களவு செய்வது மிகவும்இழிவானதென்று அவன் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. தான் ஒருபோதும் பொய், களவு செய்யமாட்டேனென்று தேவதாயாருக்குக் கொடுத்தவாக்குத்தத்தம் அவன்மனதில் ஆழமாய் வேர்விட்டிருந்தது. ஆனால் அவ்வூர்ப் பங்குக் குருவானவர் விக்றருக்குக் களவுசெய்வதிலிருந்த துவேஷத்தையும், திடசுவாசத்தையும் கண்டு அவனைமெச்சி அவனுக்கு அந்த ஐந்துரூபா நோட்டையும்கொடுத்து அனுப்பினார்.

ரோசாப்பூவானது தனதுநிறத்தையும், வாசனையையும் வேரிலிருந்து பெற்றுக்கொள்ளுகின்றது. மனிதனை இளம்பருவத்திலிருந்தே தனது நற்குணங்களையும், புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிறான்.

* * *

சீவியத்தின்எந்நிலையும்அதற்குரிய ஆபத்தைக் கொண்டுள்ளது. ஆயினும், வாலிபவயசுதான் ஒருவனை அதன்வலையிற் சிக்குண்ணப்பண்ணுவது. நற்குணங்களை மனதிற்பதிக்கும் வசந்தகாலம் இதுவே.

மூவிராசாக்கள் திருநாளுக்குப்பின்வரும்

மூன்றாம் ஞாயிறு

"தேவரீர் ஒருவார்த்தைமாத்திரம் சொல்லியருளும், என்ஊழியன் சொஸ்தமடைவான்" (மத். 8 : 1—13)

அந்தக்காலத்தில் யேசுநாதர் மலையில்நின்று இறங்கினபோது, திரளானசனங்கள் அவர் பின்னாலே போனார்கள். அப்போது இதோ! ஒருகுஷ்டரோகிவந்து அவரை நமஸ்கரித்து: ஆண்டவரே, தேவரீருக்குச்சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் கூடுமென்றான். அப்போது யேசுநாதர் தமதுகரத்தைநீட்டி அவனைத்தொட்டு: சித்தமாயிருக்கிறேன், சுத்தமாகுஎன்றார். உடனே அவனுடைய குஷ்டரோகம் சுத்தமாயிற்று. யேசுநாதர் அவனைநோக்கி: இதை நீ ஒருவருக்கும் சொல்லாதபடி பார்த்துக்கொள். ஆயினும்போய், குருப்பிரசாதிக்கு உன்னைக் காண்பித்து, அவர்களுக்கு அத்தாட்சியாக மோசே கட்டளையிட்ட காணிக்கையைச் செலுத்து என்றார். பின்பு அவர் கப்பர்னவும் ஊரில் பிரவேசித்தபோது, நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்திலே வந்து அவரை மன்றாடி: ஆண்டவரே, என் ஊழியன் திமிர்வாதமாய் வீட்டிலே கிடந்து அகோர வாதைப்படுகிறான் என்றான். அதற்கு யேசுநாதர், நான்வந்து அவனைக் குணமாக்குவேன் என்றார். அப்போது, நூற்றுக்கதிபதி மறுமொழியாக: ஆண்டவரே, தேவரீர் என் இல்லத்தில் பிரவேசிக்க அடியேன் பேறுபெற்றவனல்ல. ஆனால், தேவரீர் ஒருவார்த்தை மாத்திரம் சொல்லியருளும், என் ஊழியன் சொஸ்தமடைவான். ஏனெனில், அடியேனும் அதிகாரத்துக்கிழ்ப்பட்ட மனிதனாயிருக்கிறேன். எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற போர்ச்சேவகரும் உண்டு. நான் (அவர்களில்) ஒருவனை நோக்கி: போ, எனப் போகிறான்; வேறொருவனை நோக்கி: வா, என வருகிறான்; என் ஊழியனையும் இதைச் செய்யெனச் செய்கிறான் என்றான். யேசுநாதர் இதைக் கேட்டு அதிசயித்து, தமது பிறகே வருகிறவர்களை நோக்கி: நான் இசிறவேலரிடத்தில் இம்மாத்திரம் விசுவாசத்தைக் காணவில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகின்றேன். ஆகையால், அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்துவந்து, பரலோக இராச்சியத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடுகூடப் பந்தியில் அமர்வார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இராச்சியத்தின் மக்களோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும்என்று திருவுளம்பற்றினார். பின்னும், யேசுநாதர் நூற்றுக்கதிபதியை நோக்கி: நீ போ, நீ விசுவசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்நேரமே அந்த ஊழியன் சௌக்கியமடைந்தான்.

பரிசேயரும் சனத்தின் தலைவரும் அங்கலாய்த்து வாயடைபடக்கூடிய தாய்ப் பல முறைகளிலேயும் சனக்கூட்டமானது யேசுநாதரைப் பின்பற்றிச் சென்றதை நாம் கவனிக்கலாம். இன்று தினமும் அவர் மலையினின்று இறங்கியதும் திரளான சனங்கள் அவர்பின் செல்லுகின்றார்கள். ஆ! சதிகாரத் தலைவர்களின் வலையினுள் சிக்காதிருப்பின் இச்சனமானது இவரை மறுதலித்து பரபாஸ்என்பவனை ஓர்போதும் விரும்பியிருக்கமாட்டார்கள்.

செம்மறிகள்போல் அவர்பின் அவர்களைப் பின்செல்லப்பண்ணிய நம்பிக்கைதான் என்னே! குஷ்டரோகி ஐயமில்லா நம்பிக்கையுடன் அவரைத் தேவனும் எசமானுமென்று ஏற்றுக்கொண்டு: "உமக்குச் சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மால் கூடும்" என்கிறான். செந்தூரியனை அவர் தன்வீட்டில் பிரவேசிக்கத் தான் பாத்திரவானல்லவென்று அறிக்கையிட்டு "அவரின் ஒரு வார்த்தையே தனது ஊழியனைச் சொஸ்தப்படுத்தக் கூடும்" என்று வற்புறுத்துகிறான்.

தம்மிடத்தில் கருணை கேட்டுவந்த ஒவ்வொருவரினதும் விசுவாசத்தைப் பரிசோதியாமல் யேசுநாதர் அற்புதங்களை ஓர்போதும் செய்வதில்லை. இவ்விருவரினதும் விசுவாசமுள்ள மன்றாட்டிற்கோ தாமதமின்றிச் செவிசாய்க்கின்றார். குஷ்டரோகியைப் பார்த்து: "சித்தமானேன் சொஸ்தமாகு" என்றும், செந்தூரியனைப் பார்த்து: "நீ போ, நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது" என்றும் சொல்லியனுப்பிவிடுகிறார். என்ன வல்லமை மிக்க வார்த்தைகளோ இவை, விசுவசிப்பவனுக்கு யாவும் கூடும்.

இருகுடிகாரருக்கிடையில் மதுபானத்தையிட்டு நடந்த

ஓர் சம்பாஷணை

— மேரி ரோசலின் சூசைப்பிள்ளை —

வீதியோரத்தில்உள்ள பாழ்மண்டபத்தில் மதுப்போதைஏறிய சுந்தர் இருக்கிறான். அதேநிலையுடன் நாதன் அங்கு வருகிறான்.

சுந்தர்: அனைத்தையும் படைத்தான் மதுக்காக, மதுதனைப் படைத்தான் மனுக்காக.

நாதன்: மேதையோ மேதை, ஞானியே ஞானி. நீதான் ஞானி தோழா, மதுவைச் சுவைக்க விரும்பாதவர்கள் மனிதப்பதர்கள், லோபிகள். நாம்தான் வள்ளல்கள், மதுவுக்காக எதையுமிழக்கத் தயாராயிருக்கிறோமே.

சுந்தர்: இதோ, கவனமாகக்கேள். இன்று நான் குடிக்க எடுத்தபணம் என்பாட்டன் இன்று வைத்திய சாலைக்குப் போவதற்காகத் திரட்டிவைத்த பணம். பணத்தைக் காணாதகிழவன் இப்பொழுது கிழவியுடன் மோதிக்கொண்டிருப்பான். நமக்கேன் அதுபற்றிய கவலை கிழடுகளின் சௌக்கியத்திலும் பார்க்க மதுதான் எனக்கு முக்கியம்.

நாதன்: இப்படி விவேகியான உனக்கு இந்தநிர்மூடனை பாட்டன். எம் "குருநாதன் சாராயம்" பொதுவில் எல்லா நோய்களையும் குணமாக்குவார் என்பது அப்பேதைக்குத் தெரியாதுபோலும். அதிருக்கட்டும் நீஏதோ பெரிய "தியாகம்" பண்ணினான்று "தெய்வ நைவேத்தியம்" பண்ணியதாகக் கூறுகிறாயே. என் சாதனைகளைக் கேள். மதுவை விரும்பியமட்டும்சுவைக்கவருவாய்போதாமையால் மனைவியின் அணிகலங்களை விற்றுத் திருப்தியடைந்தேன். நிம்மதி நீடிக்கவில்லை. அவளின் கழுத்தில்இருந்த தாலியை மதுக்கடைத்தலைவனுக்குத் "தட்சணை" செய்தேன். மூளைக்கு வெளிச்சம் ஏற்பட்டது. ஆனால், இவையாவுக்கும் என் மனைவி மூட்டுக்கட்டைஎன்பது தெளிவாயிற்று. கொடுத்தேன் நல்லபொல்லடி. பின் கூந்தலில் பிடித்திழுத்துவந்து வீதியில்விட்டேன். அன்றுபோனவள் இன்றுமேதிரும்பவில்லை. எல்லாம் என் அதிர்ஷ்டம். என் சம்பளம் என்னோடு என்று எண்ணுகையில் வயிறு இன்னமும் இடமுண்டுஎன முறையிடுகிறது. அரண்மனைபோன்றவீடும், ஆடம்பர வாழ்வுக்குரியபொருட்களும் உண்டு. இவையெல்லாம் எதற்கு "எம்குரு நாதன்" கொட்டகையில்தானே பிரசன்னமாகிறார்.

சுந்தர்: போதும் நிறுத்து; நான் மணமாகாதவன் என்பதால் மதுவுக்காக நான் எதையும் தியாகம்செய்யவில்லை என எண்ணுகிறாயா? எனக்குத் "தவறணை" தான்உலகம். மதுப்பிரியர்கள்தான் சுற்றம். மதுதான் "தெய்வம்". வயிறுதான் "பூசாரி"

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் பக்கம்

தம்பி, தங்கையரே!

பாடசாலை ஆரம்பமாகி விட்டதல்லவா? புத்தம் புதிய புஸ்தகங்களை வாங்கிப் படிக்க வேண்டுமென்ற அவாவுடன் அவற்றை வாங்கி அடுக்கிவிடுவீர்கள். அப்படி அடுக்கிவிட்டால் மட்டும் போதுமா? அவற்றினுள் பயனடைய வேண்டுமென்ற அவாவுண்டானுல் படிக்கவுமல்லவா வேண்டும்.

படிப்பில் கூடிய கவனம் செலுத்தவேண்டும். படிப்பதென்றுல் எந்நேரமும் புஸ்தகத்துடனேயே இருப்பதல்ல. விளையாடவேண்டிய நேரங்களில் நன்றுக விளையாடவேண்டும். படிப்பைப்பற்றி அந்த நேரத்தில் சிந்திக்கவேண்டிய அவசியமேயில்லை. நன்றுக விளையாடினுற்றுன் மூளையும் நன்றுக வேலைசெய்யும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இரு நாட்களுக்குப்பின் அல்லவா இந்தப்பாடம். இப்பொழுது என்ன அவசரம்? என்று பள்ளிப்பாடம் படிப்பதற்குப் பதிலாக ஏதாவது கதைப்புஸ்தகம்படிக்க ஆரம்பிப்பீர்கள். அதன்பின் பாடம் படிக்க மறந்துவிடுவீர்கள். இறுதியில் 'இன்று இந்தப் பாடமாயிற்றே!' என்று விழுந்து விழுந்து படிக்க ஆரம்பிப்பீர்கள். அவசரத்தில் பாடம் மூளையில் ஏறுமா? அத்துடன் கருத்தை நன்றுய் உணர்ந்து, விளங்கிப் படிக்க முடியுமா? மேலும் அந்தச் சமயத்தில் அப்பாவோ, அம்மாவோ அழைத்தால் உங்களுக்கு எவ்வளவு ஆத்திரம் உண்டாகும் என்பதை உணர்ந்து பாருங்கள். உரியகாலத்தில் உரியபாடங்களைப் படித்து வைத்தால் ஏதாவது குறைந்தா போய்விடும்? அன்றன்று தரும் பாடங்களையும் அன்றன்றே படித்து முடித்துவிடுங்கள்.

உங்களன்புள்ள அண்ணு.

மரியாயின் மைந்தன்

போர்த்துக்கல் தேசத்தில் அநேக பிள்ளைகளுள்ள ஒரு பெரிய குடும்பம் இருந்தது. இக் குடும்பத்திலுள்ள எல்லோரும் புறொட்டஸ்தாந்தமதத்தைச் சேர்ந்தவர்கள். மத விஷயத்தில் வெகு வைராக்கியமுள்ளவர்கள். இக்குடும்பத்திலிருந்த பிள்ளைகளுள் மிகவும் இளையவன் ஆறு வயதுச் சிறுவன். இவன் கடைசிப் பிள்ளை ஆனதினுல் எல்லோரும் இவன்மேல் அதிக அன்பு காட்டினுர்கள். சிறு வயதிலேயே நற் பழக்கங்களைக் கற்றுக்கொள்ள் அவனைத் தங்கள் ஊரிலுள்ள கத்தோலிக்க பாடசாலையில் படிக்கவைத்தனர். இவன் பெயர் கொன்ஸ்ரன்ரைன். இவன் மகா புத்திசாலி. கல்வியில் தேர்ச்சி பெற்று வகுப்பில் முதலிடம் பெற்றுன். கத்தோலிக்க பிள்ளைகள் செபம் சொல்லும்போது இவனும் சேர்ந்து செபிப்பான்.

ஒருநாள் தன் பெற்ருர், சகோதரர், சகோதரிகளுக்கு முன்பாகத் தனக்குத்தெரிந்த பிரியததத்த மந்திரத்தை உச்சரித்தான். இதைக் கேட்ட தாய்: "இனிமேல் இவ்வார்த்தைகளை உச்சரிக்காதே. கத்தோலிக்கரின் குருட்டுப்பக்தி அது. மரியம்மாளும் எங்களைப்போல் ஒரு பெண்தான்" என்று அவனை எச்சரித்தாள். கொன்ஸ்ரன்ரைன் அன்று தொட்டு அம் மந்திரத்தை உச்சரியாது விட்டுவிட்டான்.

இது நடந்து சில காலத்தின்பின் ஓர்நாள் எல்லோரும் புறொட்டஸ்தாந்த கோவிலுக்குப் போகப் புறப்பட்டார்கள். அப்போது வெளியே மேசையிற்கிடந்த ஓர்புஸ்தகத்தைத் திறந்து பார்த்துக்கொண்டிருந்த கொன்ஸ்ரன்ரைனின் கண்களில் "பிரியதத்தத்தினுலே பூரணமரியாயே வாழ்க! கர்த்தர் உம்முடனே; ஸ்திரிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே" என்னும் வாக்கியம் தென்பட்டது. அதைக் கண்ட கொன்ஸ்ரன்ரைனுக்கு அளவில்லா ஆனந்தம் உண்டாகியது. புத்தகத்தை எடுத்துக்கொண்டு தன் தாயிடம் ஓடினுன்.

"இதோ பாருங்கள் அம்மா! நீங்கள் குருட்டுப் பக்தி என்று என்னை எச்சரித்தீர்கள்; ஆனுல், வேதாகம நூலில் அந்த வாக்கியங்கள் இருக்கின்றனவே!" என்றுன். உடனே அவன் கையிலிருந்த புத்தகத்தைப் பறித்து "இனிமேல் இந்த விஷயத்தைப்பற்றிப் பேசாதே" எனக் கண்டித்தாள் அவன் தாய்.

கொன்ஸ்ரன்ரைனுக்குத் தக்க பராயம் வந்தபோது ஓர்சமயம் தன் சகோதரியோடு கத்தோலிக்க திருச்சபையைப் பற்றிக் கதைக்க நேரிட்டது. அப்போது, "இதோ பார்! என் பிள்ளைகளுள் எவனுவது கத்தோலிக்கதிருச்சபையிற் சேரவில்லை; நீதான் உன் எண்ணத்துக்கு நடந்து கொண்டாய்; உன்னை நான் குத்திக் கொன்றுபோடுவேன்" என்று அவன் சகோதரி. கொன்ஸ்ரன்ரைன் பதில் கூறவில்லை. ஆனுல், அவர்களின் மனந்திரும்புதலுக்காக மாதாவை மன்றுடிவந்தான்.

சிலகாலத்தின் பின் அவளுடைய குழந்தை ஒன்று நோய்வாய்ப்பட்டு வைத்தியர்களால் ஒரு உதவியும் செய்ய முடியாமல் குழந்தை இனி மேல் பிழைக்கும் என்ற நம்பிக்கையும் அற்றுப்போகவே தாளாத துக்கத்தில் அமிழ்ந்தியிருந்த தனது சகோதரியிடம் கொன்ஸ்ரன்ரைன் சென்று, "மனிதனுல் ஆகாதது மாதாவினுல் ஆகும்; மாமரி சர்வேசுரனுடைய மாதா என்பதை மறவாதே; இருவரும் சேர்ந்து ஒரு பிரியததத்த மந்திரத்தை உச்சரிப்போம், நம் மாமரியின் உதவியைக் கேட்போம்" என்றுன்.

இதைக் கேட்ட சகோதரிக்கு அச்சமும், அருவருப்பும் உண்டானது. என்றுலும், தன் சகோதரனின் முகத்திற்துலங்கிய தூய்மையையும், அவனது அணைகடந்த அன்பையும் கண்டு மனந்தேறிப் பிரியதத்த மந்திரத்தை இருவருமாகச் செபித்தார்கள். நோயுற்ற குழந்தை ஆச்சரியத்துக்குரிய விதமாக அயர்ந்து நித்திரை செய்தது. மறுவாரம் சற்று ஆரோக்கியமடைந்தது. இங்ஙனம் கொன்ஸ்ரன்ரைனின் சகோதரியையும், பிள்ளைகளையும் சத்தியதிருச்சபையில்சேர்க்க ஏதுவாயிற்று.

ம. ரூசபெல் குருசியா.

கட்டுரைப் போட்டி:

தம்பி தங்கையரே, உங்கள் பாஷைப் பாடத்திற்கு உதவியாக, கட்டுரைப் போட்டியை ஆரம்பிக்கின்றேம். அத்துடன் உங்களை எழுத்துத்துறையிலே ஊக்கப்படுத்துவதே எமது நோக்கம். நத்தால் சிறுகதைப் போட்டியிலும் பார்க்க இக்கட்டுரைப்போட்டியில் அதிக ஊக்கம்காட்ட வேண்டும் என்று விரும்புகின்றேம்.

போட்டிக்குரிய விடயம்.

1. காலைக் காட்சி.
2. நான்செய்த பிரயாணம்.
3. நான் வளர்க்கும் செல்லப் பிராணி.

இந்த விடயங்களில் ஒன்றைத் தெரிந்து 300 சொற்களில் அடங்கக் கூடியதாக, கொப்பித்தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதியனுப்ப வேண்டும்.

போட்டி விதிகள்.

1. 15 வயதும், அதற்குட்பட்ட மாணவமாணவிகள் பங்குபற்றலாம்.
2. பாஷை கற்பிக்கும் ஆசிரியரின் அனுசரணையுடன் கட்டுரைகள் எழுதப்படவேண்டும்.
3. முடிவு திகதி: 31–1–60.
4. திறமைபெற்ற 3 கட்டுரைகள் மாசிமாதம் 2-ம் வார இதழிலிருந்து பிரசுரிக்கப்படும்.

கட்டுரைகள் அனுப்பப்படவேண்டிய முகவரி:

கட்டுரைப் போட்டி,
புனித அன்னுள் கோவில்,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

சிறுவர், சிறுமியரிடமிருந்து சிறு கதைகள், கட்டுரைகள், அர்ச்சியசிஷ்டர்களின் சுருக்கமான வரலாறு, விடுகதைகள், காஷ்யமான சம்பாஷணைகளை அண்ணு எதிர்பார்க்கிறூர்.

அண்ணுவின் முகவரி:

அண்ணு,
பாலர் பக்கம்,
புனித அன்னுள் கோவில்,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல் எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

— அர்ச். பிரான்சிஸ் சேல்ஸ்

உங்களுக்குத் தெரியுமா?

By Scio

[1] இடிமுழக்கம் என்பது, வெறுமையைக் காற்றுநிரப்பத் திரும்பும்போது மின்னல் பாதைநீளம் அதன் திடீர் விசாலிப்பாலும், இடப் பெயர்ச்சியாலும், பின்னர் மோதிக்கொள்வதாலும் உண்டாகிறதென நம்பப்படுகிறது. இடிமுழக்கம் 'சுழல்'க் காரணம் நிவிரமும், குறுகியதுமான மின்னலின் திருப்பத்திலிருந்து உண்டாகும் சப்த அலைகள் பிரயாணஞ்செய்ய வெவ்வேருன தூரங்களைக் கொண்டிருப்பதே. அவைகள் செல்லும் வழியில் வழமையாக ஒருதொகையானமுறை இடிமுழங்கச் செய்யும்போது மலைகளும், பள்ளத்தாக்குகளும், மேகங்களும் இந்தச் சப்தங்களைப் பிரதிபிம்பிக்கச் செய்கின்றன.

[2] பெயர்பெற்ற நாடகபாத்திரங்களின் குடும்பத்தைச்சேர்ந்த அமெரிக்கரான ஜூனியஸ் புறூட்ருஸ் பூத் என்பவர் எல்லாச் சேத்திரங்களிலும் ஒரேமாதிரியாய் வணங்கி வழிபட்டார். தான் கடந்துசென்ற ஒவ்வோர் கோவிலுக்கு முன்பாகவும் தனது தொப்பியை எடுத்து ஆசாரஞ் செய்தார். கிறீஸ்தவ, யூத சமய சடங்குகள் இரண்டிலுமே நன்றுய்க் கலந்துகொண்டார். முஸ்லீம்களின் புனித நாட்களையும் அனுசரித்தார். 1852-ம் ஆண்டு அவர் மரித்தபோது, எல்லாச் சமயங்களுமே அவர் தனது சமயத்தவரென்று உரிமைபாராட்டின. ஆனுல், அவருடைய எபிஸ்கோபல் சபையைச்சேர்ந்த குடும்பமானது பப்ரிஸ்தசபை நிலவறை ஒன்றிலே பிறிமேசன்சபைச் சடங்குகளுடன் அவரை அடக்கஞ்செய்தது.

[3] சந்திரன் பதமையாகச் சலசலக்கும்போது சூரியன் வெடித்துப் பேரொலி செய்கிறதென்று வானுலித் தூரதிருஷ்டிகள் கொண்டு வானமண்டலத்துக்குச் செவிகொடுக்கின்ற விஞ்ஞானிகள் அறிவிக்கின்றூர்கள். பால்வீதிமண்டலம் — அதாவது சூரியனும், அதன் பிரகங்களும் சேர்ந்துள்ள ஆகாயகங்கை இடையறுது இரைந்துவருகின்றது. சப்தங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து இரைவதாலே சிலவேளைகளில் இது வானுலித் செவிசாய்ப்பாளருக்கு அமைதியை உண்டுபண்ணுகிறது. ஆனுல், அது விஞ்ஞானிகளுக்குக் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு குடிகாரருக்கிடையில் .....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மதுவடிப்போன்தான் உலகில் நான் கனம்பண்ணும் "கௌரவமனிதன்" என் மதுப்பற்றைக் கண்டித்த பெற் றோரைத் துறந்துவிட்டேன். கீழ் மக்கள் அவர்கள். அவர்கள் வீட்டில் நான் புசிப்பதில்லை. ஆனாலும் கை தவறி வெளியில்வைக்கும் சில்லறை களைக் கவனிக்கவும், அப்பாவின் "இரும்புப்பெட்டிக்குச் சாவிமாட்ட வும்" நான்அங்கு செல்வதுண்டு.

நாதன்: நம்சாதனைகள் இருக்கட் டும். நம் எதிர்காலத்தைப் பற்றி என்னசொல்லுகிறாய்? "மதுஒழிப்பு இயக்கம்" தீவிரமாகப்பரவும்போல் இருக்கிறதே; அதற்கு நாம் ஏதும் திட்டம் தீட்டவேண்டாமா?

சுந்தர்: சீ! முட்டாள். நீ ஒருகோ ழை. நம்மைப்போல் "மதுபக்தர் கள்" இருக்குமட்டும் "மதுபகவா னுக்கு" அழிவுவராதென்பது திண் ணம். மது ஒருதுளியும் தவறாமல் நம்வயிற்றில் "தஞ்சம்" புகுந்தபின் மதுஒழிப்புத் தொண்டர்களால் என்னசெய்ய முடியும்.

நாதன்: சபாஷ்! உன்மூளையே மூளை. வீரமேவீரம். உன்னைப்போல் உண்மையான மதுத்தொண்டர்களை அகிலஉலகிலும் காணமுடியாது. மதுவின் இராச்சியம் மங்காப்புகழு டன் விளங்குமாஞல் நம்வேகமான முன்னேற்றத்திற்குகந்தபடி குடிப்ப தற்கு நம்வருவாய் வருங்காலத்தில் நம்முடன் ஒத்துழைக்குமா?

சுந்தர்: "மதுபெருமானுக்காக"த் தொழிலையும் துறந்துவிட்டு .....

நாதன்: தவறணைவாசிகளே! இனி நாங்கள் குடிவகைக்குப் பூசைசெய்வ தெங்ஙனம்?

சுந்தர்: பேசவிடு. அவசரப்படா தே. "சுதந்திரமான" திருட்டுத் தொழில் இருக்கிறது. கவலையைவிடு. பொலிசார் திருடர்களைத் தேடித் திரிந்து "தாட்சணை" பண்ணுகிறார் களே.

(இதுவரையிலும் மறைவில்இருந் து அவர்கள் சம்பாஷணையை ரசித்த பொலிஸ்அதிகாரி வெளிப்படுகிறார்).

பொலிஸ்அதிகாரி: ஆம், நண்பர் களே! நாட்டின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடுவோரே! துர்ச்செயல்களின் "விவசாயிகளே" இதோ உங்கள் தாட்சணை. கீட்டுங் கள் கையை (விலங்குமாட்டுகிறார்)

கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. M. B. 2267

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

அனலிதீவு, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், முன் அனலிதீவு விளைபொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என வழங்கப்பட்டது. — வழக்காளி.

எதிராக

அனலிதீவு,

1. வேலாயுதம் கத்தையா,
2. ஷெயூர் பெண் செல்லம்மா.

— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டின் M. B. 2267-ம் இலக்க வழக்கில் எனக் குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு தண்டுக் காணி 1960-ம்ஆம் மாசிமீ 23-ம்உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-30 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1689-25சதமும். ரூபா 1500-க்கு 10-6-1958 தொடக்கம், 8-5-59 வரை 6 வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுபடும்வரை 5 வீதமான வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 213-72½ சதமும். இதில் ரூபா 300 கொடுபட்டது.

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்தி றிக் தீவுப்பகுதி, அனலிதீவுக் கோவிற் பற்று, அனலிதீவு இறை "அம்மியரு யன் கலடி" பர. நி. இல. ஏழு (7). எல்லை: கிழக்கு — ஆறுமுகம் பெண் விசாலாட்சிக்கும், முருகேசு பெண் உமா பதிக்குமுரியவாதனங்கள். வடக்கு— முருகேசு பெண் உமாபதிக்குரிய வாத னம். மேற்கு—விதையாகிலம். தெற்கு — வேலாயுதம் கிருஷ்ணசாமிக்குரிய வாதனங்கள். இதடங்கலும் தெற்கெல் லைக் காணியிலிருக்கும் கிணற்றிற் பங் கும், வழிவாய்க்காற் பாவிப்புரித்தம். இதன் பதிவு இல. C. 291/139.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

காரைநகர், 1-9-1960.

நன்றியறிந்த ஸ்தோத்திரம்

அர்ச். அந்தோனியாரிடம் நான்கேட் டுக்கொண்டபடி எனக்குஇருந்த குறை பாடுகள் நீங்கியதற்குநன்றியாகப் பாது காவலணில் இதைப்பிரசுரிக்கிறேன். எனது மனைவியாரின் குறைபாடுகளும் நீங்கக் கோடியற்புதர் அருள்புரிவாராக.

யோ. கொ.

நன்றித் துதி

தாயே, தயைக்கடலே, தவிர்த்தவர்க் குத் தடாகமே! உமதுசரண நிழலே தஞ்சமென்றோடிவந்த தாயும், சேயு மாகிய எங்களைத் தள்ளாமற்தற்காத்தீர். உமதுஇரக்கத்தை எவ்வாறு வர்ணிப் பேன்? என்உடம்பெல்லாம் வாய்களாய், அத்தவாய்களால் எத்தனைகோடிதரம் பேசுவேனே! அத்தனைசதகோடிதரம் உம்மைப்போற்றுகிறேன், புகழுகிறேன், தோத்திரிக்கிறேன்.

கணவனையிழந்து கதிகலங்கிநின்ற என் னைக் கடன்காரியென்று கோட்டுக்கிழுத்த னர் எம்மவர். மழை, குளிர், வெய்யில் என்று பாராது நாலுவருடங்களாகக் கோட்டுக்கு அலைந்தேன். எதிரிபக்கமோ பிரசித்திபெற்ற வழக்கறிஞர்களுடனும், அநேகசாட்சிகளுடனும் சூதாகலமாகக் காணப்பட்டது. ஒருசிலபிறரே எனக்கு உதவியாக நின்றனர். வழக்குவிசாரணை மும்முரமாக நடைபெற்றது. என்மன நோய் உடல்நோயாக என்னைவாட்டியது. கடைசியாகத் தீர்ப்புக்கூறும்நாளும் நெருங்கிற்று. கீதிபதி தீர்ப்புக்கூறமுன் னரே நான் அபசெயமடைவேனென்று ஊரவர் தீர்ப்புக்கூறிவிட்டனர். எனக் குச்சகாயமாய் இருந்தவர்களும் மனம் சோர்ந்து விட்டனர். எல்லாம்வல்ல சதாசகாயஇராக்கினியோ என்மனதைத் தளரவிடவில்லை. அவரின்பாதாரமே எனக்காதாரம் என்றிருந்தேன். உண் மையை உணர்த்தும்தாயே எனஇரந் தேன்.

என்நேசஅன்னையாவராலும்கைவிடப் பட்ட என்மேல்இரக்கினாள். என்கண்ணீ ரைத் துடைத்தாள். கைதந்து காப் பாற்றினாள். வழக்கில் வெற்றியத்தந்து நீதியைநிலைநாட்டி என்னைமகிழச்செய் தாள். இப்பெரிய உபகாரராயகிக்கு என் மனமார்ந்தநன்றியை உடன்தெரிவியாத குற்றத்துக்கு மன்னிப்பு வேண்டுகிறேன்.

சதாசகாயமாதாவின் நாமம் புகழப் படுவதாக!

மட்டக்களப்பு தாயும் சேயும்

நன்றித் துதி

முற்றுமிறை செயலே முற்றிடினும்
தன்னருளைப்
பெற்றவர் தம்பாலே பெரிதாகும்.

கற்பிலே உத்தமலில்லியென அறியப் படுகிறவரான அர்ச். அந்தோனியாரில் முழுநம்பிக்கைவைத்து, எனதுகுழந்தை யின் கடினவியாதியைச் சொஸ்தப் படுத்துமாறு மிகவும்வினயமாய் இரந்து மன்றாடி வந்தேன். இப்போது குழந்தை பூரணசுகத்துடன் காணப்படுகிறது. அவ ருடைய திருநாமம் எங்கும் எப்பொழுதும் பிரபல்யப்படுவதாக.

அர்ச்சகாயராகிய
கே. வெலிக்கோர் பீரிஸ்.

தலைமன்னார்.

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச்.பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 30-ம்தேதி சனிக்கிழமை பி.ப. 4மணிக்கு அர்ச்.சூசை யப்பர் சிற்றாலயத்தில் வழமைப்பிரகாரம் ஆரம்பமாகி நடந்தேறும். அச்சமயம் ஐந்து சகோதர சகோதரிகள் தமது நவாப்பியாசகாலத்தை முடித்து வார்த் தைப்பாடு எடுப்பார்கள். இதுஓர் ஆடம் பரமான கூட்டமாயிருப்பதால் சகோ தரர் எல்லோரும் தமது சபைஅங்கி யோடு வரும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பகுதித்தலைவர் மார்சகம் கூட்டமுடிவில் நடக்கும்.

A. S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 2262

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

அனலிதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், முன் அனலிதீவு விளைபொருள் உற்பத்தி விற்பனவுச்சங்கம் என வழங்கப் பட்டது. — வழக்காளி.

எதிராக

அனலிதீவு,

1. சின்னத்தம்பி பொன்னையா,
2. ஷெயூர்வேலாயுதர் சின்னத்தம்பி

— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 2262-ம் இலக்க வழக்கில் எனக் குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு தண்டுக் காணி 1960-ம்ஆம் மாசிமீ 24-ம்உ புதன்கிழமை முற்பகல் 11-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1270-00-ம். ரூபா 1000-க்கு 5-6-58 தொடக்கம், 8-5-59 வரை 6 வீதமான வட்டியும், அதன்மேல் முழுத் தொகைக்கும் இறுபடும்வரை 5 வீதமான வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 198 32½ சதமும்.

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்தி றிக் தீவுப்பகுதி, அனலிதீவுக் கோவிற் பற்று, அனலிதீவு இறை "கதிரன் அடைப்பும் தழுகலும்" பர. நி. இல. இருபத்தைந்து. பர. நி. இல. 25) பனை கள், கிணறுகள், கேணியும். எல்லை: கிழக்கு—வேலாயுதம் பெண் சிவகாமிக் கும், மறுபேர்கட்குமுரிய வாதனம். வடக்கு — ஐயம்பிள்ளை வேலாயுதத்திற் கும், பங்காளர்கட்குமுரிய வாதனங்கள். மேற்கு—றோட்டு. கெற்கு—அருணசலம் நமசிவாயத்திற்கும், இளையதம்பி சுப்பிர மணியத்திற்கும், பங்காளர்கட்குமுரிய வாதனங்கள். இதடங்கலிற் சொரியலா யரைவாசி.

வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்.

காரைநகர், 1-9-1960.

சில கேள்விகள்

* சாத்தானினதும், பாவத்தின தும் சின்னம் யாது?

சர்ப்பம். நன்மை, தீமையை உணர்த்தும் விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாமென்று ஏதேன் தோட்டத்தில் தேவன் ஆதித்தாய் தந்தையருக்குச் சொல்லியிருந்தார். ஆனால், சாத்தான் சர்ப்பவடிவம் எடுத் துச்சென்று அந்தக் கனியைப் புசிக் கும்படி வஞ்சித்தது. ஆதாமும், ஏவா ளும் அதனைப் புசித்தார்கள். இரு வரும் தேவனால் ஏதேன் தோட்டத்தி லிருந்து துரத்தப்பட்டார்கள்.

* அர்ச். சிலுவை அருளப்பரும், அவிலாநகர் அர்ச். தெரேசம்மாளும் கார்மேல்சபைக்கு ஆற்றிய தொண்டு யாது?

இற்றைக்குச் சுமார் 400 வருடங் களுக்குமுன் ஸ்பெயினிலே அவிலாந கருக்குச் சமீபமாகப் பிறந்த அர்ச்.சிலு வை அருளப்பரும், அவிலாநகரைத் தனதுதாயகமாகக்கொண்ட கார்மேல சபைப் பெரிய அர்ச்சியசிட்டவளான அர்ச். தெரேசம்மாளும் கார்மேல் சபையைச் சர்வேசுரனுக்கு அதிகம் உகந்ததாயிருக்கச் செய்யுமாறு ஒருங்குசேர்ந்து உழைத்ததே. அரு ளப்பர் 25 வயதடையவராய் இருக் கும்போது ஓர் கார்மேல்சபைக் குரவ ராயினர். இவர் தம்முடைய சீவிய காலத்திலே மிகுந்த பாடு வேதனைகளை அனுபவித்தும், சிலுவையிலே திவ்விய யேசு அனுபவித்த பாடுகளிலே அவ ரைக் கண்டுபாவிக்க விரும்பியவராய் அவைகளையெல்லாம் தேவதிருச் சித் தத்துக்குப் பணிந்தமனதுடன் பொறு மையாக அனுபவித்தும்வந்தகாரணமா கச் சிலுவை அருளப்பர் என்னும் சிறப் புப்பெயர்சூட்டப்பெற்றார். திருச்சபை யிலேஇவருடையதிருநாள்காத்திக்மா தம்24-ந்திகதிகொண்டாடப்படுகிறது

துடிக்கும் தலைப்புகள்! துணிச்சலான போக்கு!
துல்லியமான அடுக்குமொழி! அற்புதமான கார்ட்டூன்!
ஆனந்தமூட்டும் சிறுகதைகள்! ருசிகரமான செய்திகள்!
இலக்கியப் பூங்கா! எழில் கோத்த வண்ணமறைக் கருத்துகள்!
கவிதைப் பொழில்! கனல்கக்கும் தலையங்கம்!

தித்திக்கும் தீந்தமிழிலே — நேர்மையான நடுநிலைமையிலே
வாலிபர்களுக்கு வழிகாட்டி — அன்புடன் அறிவூட்டும்

கத்தோலிக்க பத்திரிகைகள்.

		தனிப்பிரதி	வருட சந்தா
கத்தோலிக்கு சேவை (மாதம் இருமுறை)		25	5-00
ஞான தூதன் (மாதாந்த வெளியீடு)		25	2-25
திரு இருதய தூதன்	,,	35	3-50
சத்திய போதினி	,,	25	2-50
சத்திய சுடர்	,,	25	2-25
தென் ஒலி	,,	25	2-25
முன்னேடி	,,	25	2-25
சர்வ வியாபி	(வாரப்பதிப்பு)	15	5-00

"கத்தோலிக்குசேவை ஆண்டுமலர்" 70

வருட சந்தாவுக்குப் போஸ்றல் ஓடரும், தனிப்பிரதிக்கு முத்திரையும் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு: கத்தோலிக்குசேவை ஆண்டுமலர் குறைந்த பிரதிகளே கைவசம் இருப்பதால் முந்துவோருக்கே பத்திரிகை கிடைக்கும்.

A. C. சில்வெய்ரு,
பொருளாளர்,
மரியாயின்சேனை.

181, பேங்ஷால் வீதி,
கொழும்பு 11.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, January 21-1960.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org